வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

ஆத்தகம் 20 | திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆடி திங்கள் 8-ம் நாள் (24—7—1966) ஞாயிற்றுக்கிழமை ரபி: ஆகி 5 | இதழ் 8

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




● பதவி உயர்வு ● மொழிச் சலுகை ● சேவை மாற்றம்

# திறைசேரி புதிய சுற்று நிருபம்

## தமிழ் ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள்

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் சாதகமான திறைசேரி சுற்று நிருபம் ஒன்று வெகு விரைவில் வெளிவர விருக்கிறது. இச்சுற்று நிருபம் வெளியானதும் கடந்த சில ஆண்டுகளாக முறைப்படி கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகளை இழந்திருக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமது பதவி உயர்வுகளை உடன் பெறுவர். அத்துடன் சேவை மாற்றம் பெறும் அரசாங்க ஊழியர்கள் ஆட்சி மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவார்கள். ஒய்வு பெற விரும்பும் அரசாங்க ஊழியர்கள் ஐந்து வருட மேலதிக சேவை காலச் சலுகை பெற்று ஓய்வு பெற அனுமதிக்கப்படுவார்கள்.

திறைசேரி சுற்று நிருபம் ஒன்று வெகு விரைவில் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட விருக்கிறது. இச்சுற்று நிருபம் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு பல சலுகைகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்கள் மொழிப்பிரச்சினையின் கீழ் மீண்டும் ஒய்வு பெற விரும்பினால் அவர்களின் சேவைகாலத்துடன் மேலும் ஐந்து வருட சேவைகாலச் சலுகை வழங்கப்படும் என்று அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

மேலும் அரசாங்க சேவையில் உள்ள பழைய சேவையாளர் அவரின் இன்றைய சேவையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு பதவிக்கு விண்ணப்பித்துத் தெரிவு செய்யப்பட்டால் அவர் பழைய சேவையாளராகவே கணிக்கப்பட்டு சிங்கள மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவர்.

பழைய சேவையாளர்கள் ஆட்சி மொழித் தேர்ச்சியின்மை காரணமாக இது வரை பெறத்தவறிய பதவி உயர்வுகளை உடன் பெறுவதற்கும் இச்சுற்று நிருபம் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்.

பொறியியலாளர்கள், சிற்றூழியர்கள், வானொலி அறிவிப்பாளர்கள், ஆசிரியர்கள், தட்டெழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் ஆகியோர் அவர்கள் புதிய சேவையாளர்களாயினும் சரி பழைய சேவையாளர்களாயினும் சரி அவர்களும் ஆட்சி மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்குப்பெற இச்சுற்று நிருபம் வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

மேலும் புதிய சேவையாளர் ஒருவர் ஆட்சி மொழியில் பெற வேண்டிய ஆகக் கூடிய தேர்ச்சி எட்டாம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைவதே என்றும் இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

## திரு. ஜீ. ஜீ. திணறல்

இந்துப் பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்றபோது காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. சதாசிவத்தின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்க முடியாமல் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. திண்டாடித் திணறியதாக ஒரு செய்தி கிடைத்துள்ளது.

இக்கூட்டத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில், தான் இந்துப் பல்கலைக்கழகம் கோருவது இராமனாதன் போன்ற தலைவர்கள் சேர்த்து வைத்த சொத்துக்கள் வீணாகப்போகாமல் பாதுகாக்கத் தான் என்றும், இதை சமஷ்டிவாதிகள் உணர்ந்து கொள்ள முடியாமல், தமிழ்ப் பல்கலைக் கழகம் கேட்டு வருகிறார்கள் என்றும் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவப்படுமானால், இராமனாதன் போன்றவர்கள் விட்டுச் சென்றிருக்கும் அளப்பரிய சொத்துக்களை என்ன செய்வது என்றும் கூறியதாக தெரிகிறது.

திரு. பொ. வின் பேச்சை மிக்கவனமாக உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த திரு. சதாசிவம் எழுந்தார். 'ஐயா ஒரு சந்தேகம்

(9-ம் பக்கம் பார்க்க)

## பொ. கட்சிக்குள் எதிர்ப்பு அணி

### இடமாற்றம் ஏற்படுத்திய விபரீத முடிவு

பொன்னம்பலம் கட்சியினரின் மாநாடு ஏற்கனவே திட்டமிட்டபடி வவுனியாவில் நடைபெறாது யாழ்ப்பாணத்

(9-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புதிய தொழிற்சாலை

### 5000 இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்

இலங்கையில் மிகப் பெரிய தொழிற் சாலையாக விளங்கப் போகும் எரி பொருள் (பெற்றோல்) வடிகட்டும் தொழிற் சாலை திருகோணமலையில் நிறுவப் படலாம் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப் படுகிறது. இத் தொழிற்சாலை நிறுவப்பட்டால் ஐயாயிரம் இளைஞர்களுக்கு தொழில் வசதி கிடைக்கும்.

தென்னிலங்கையில் களனியில் நிறுவப்பட விருந்த எரி பொருள் வடி கட்டும் தொழிற்சாலை இப்பொழுது திருகோணமலையில் நிறுவப் படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக எரி பொருள் கூட்டரவு அதிகாரிகளுடன் இராசாங்க அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாகவும் அறியப்படுகிறது. இத் தொழிற்சாலை பெரும்பாலும் சீனன் குடாவில் நிறுவப் படலாம் என்றும் நம்பப்படுகிறது.

கிழக்கு மாகாண முன்னேற்றம் பற்றி திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராஜா சமர்ப்பித்த திட்டங்களில் இதுவும் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இத் தொழிற்சாலை திருமலையில் நிறுவப்பட்டால் சிமெந்து தொழிற்சாலைக்குப் பின்னர் தமிழ்ப் பிரதேசத்தில் அமைக்கப் பட்ட மிகப் பெரிய தொழிற்சாலை இதுவாகவே இருக்கும்.

## புதிய தொடர் கதை

அடுத்த இதழில்

### "அலை கடல்தான் ஓயாதோ"

செங்கை ஆழியான் எழுதுகிறார்

ஆரம்பமாகிறது

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

அடுத்த இதழ் வெளியூரில் 30-7-66 காலை தலை நகரில் 29-7-66 மாலை கிடைக்கும்

# கணித மேதை ஈன்ஸ்டின் சம்பளம்!

உலகப் புகழ் கணித மேதை-விஞ்ஞானி ஈன்ஸ்டினுக்கு, அமெரிக்காவில் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தலைவர்பதவியை வழங்க முன் வந்தார்!

ஈன்ஸ்டினிடம்எவ்வளவு சம்பளம் தேவை' என்று கேட்கப்பட்டது!

'நான் கொஞ்சம் செலவாளி ஒரு ஆயிரம் டாலர் சம்பளம் கொடுங்களேன்; இதுஅதிகம்என்றால்கொஞ்சம்குறைத்துக் கொள்ளுங்கள்' என்றார்.

'ஆயிரம்' டாலர் என்றவுடன் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்!

'மிகவும் அதிகமாகக் கேட்டு விட்டோம் போல் இருக்கிறதே' என்று தன்னைத் தானே நொந்து கொண்டார் ஈன்ஸ்டின்!

'உலகப் புகழ் பெற்ற மாமேதை நீங்கள்; உங்களுக்கு ஆயிரம் டாலர் சம்பளம் கொடுப்பது அநீதி மட்டுமல்ல; எங்களுக்கு அவமானமும் கூட என்றார் பல்கலைக் கழகத் தலைவர்!

ஈன்ஸ்டினுக்கு ஒன்றும் புரியவில்லை: 'என்ன சொல்லுகிறீர்கள்?' என்றார்!

'உங்களுக்கு ஐயாயிரம் டாலர் மாதச் சம்பளமாக போட்டிருக்கிறோம் என்றார் தலைவர் அமைதியாக!'

# ஒட்டகம்

நாற்கால் மிருகங்களில் ஒட்டகமும் ஒன்று. இதற்கு எல்லா மிருகங்களைப் போன்ற (அமைப்பு) ஒற்றுமை இருந்தாலும், சில வேற்றுமைகளும் உண்டு. தலை சற்று நீண்டவையாயும், முகம் ஆட்டின் முகம் போன்றும், கழுத்து வளைந்தும், முதுகு கூர்நுனிக் கோபுரமாக உயர்ந்தும் இருக்கும்.

பாலைவனங்களில் பிரயாணம் செய்ய ஏற்ற விலங்கு ஒட்டகம் ஒன்றே. ஆறு ஏழு நாட்களுக்குத் தேவையான அளவுக்கு அது உணவை உட்கொண்டு அதைக் கொழுப்புச்சத்தாக மாற்றித் தன் உடலுக்குள் சேமித்துக் கொள்ளும். இவ்விதம் சேமித்து வைத்துக் கொள்ளும் உணவுச் சத்தே தியில், இதே போன்று தண்ணீரையும் சேமித்து வைத்துக் கொள்ள இதனுடைய வயிற்றில் பைகள் இருக்கின்றன. பசுந்தழை, கசப்பு அதிகமாகவுள்ள செடிகள், முட் செடிகள் முதலியன இதன் உணவாகும். இதன் உரோமத்திலிருந்து ஆடைகள் கம்பளங்கள் நெய்கின்றனர்.

இம் மிருகம் அதிகமாக அரேபியாதேசத்தில் உண்டு. அரேபியர்கள் இதன் உதவியினாலே தங்கள் வேலைகளை முடிக்கின்றனர். அவர்கள் பிரயாணம் செய்யும் வாகனம் ஒட்டகமே. பாலைவனங்களில் பிரயாணம் செய்யக் கூடிய மிருகம் என்று சொன்னால் அது ஒட்டகமேயாகும். அதனாலே அதைப் பாலைவனக் கப்பல் என்றும் சொல்வர். மிருகங்களில் நீந்தத்தெரியாத மிருகம் என்று சொன்னால் இந்த ஒட்டகத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

எஸ். தோமஸ்பிள்ளை,
பசறை குறூப்.




# திருடினாயா?
## கவிதையை மனப்பாடம் செய்!

'முள்ளை முள்ளினால் எடுக்கலாம்' ஆனால் 'நெருப்பை நெருப்பினால் அணைக்க முடியாது' இதுபோல் குற்றம் புரியும் இளைஞர்களைத் திருத்த சிறானவழி, அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது அல்ல. அவர்கள், தாம் செய்த தவறை உணர்ந்து திருந்திக் கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். இதுவே முக்கியம்.

நாகரீக முன்னேற்ற நாடுகளில் குற்றம் புரியும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இளங்குற்றவாளிகள் பள்ளிகள் விரும்பிய பலனைக் கொடுப்பதில்லை என்பது கண்கூடு.

மேற்கு ஜெர்மனியில் டார்ம்ஸ்டட் மாவட்ட நீதிபதி டாக்டர் ஹோல்ஷு ஒரு புதுமை விரும்பி. இளங்குற்றவாளிகளைத் திருத்த சில புதுமையான முறைகளைக் கையாள வேண்டும் என்று அவர் 12 ஆண்டுகளுக்கு முன்பு, தமது சகாக்களிடம் கூறியபோது, அவர்கள் எள்ளி நகையாடினர். ஆனால் அவர், அதற்காக மனம் தளர்ந்துவிடவில்லை; நியாயமெனப்படுகிற முறையில் இளங்குற்றவாளிகளுக்கு அவர் 'நீதி' வழங்கினார் அவரது 'புரட்சிகரமான - புதுமையான-விந்தையான தண்டனைகள் காரணமாக அவருக்கு 'சாக்லேட் நீதிபதி' என்ற பட்டப் பெயரும் ஏற்பட்டது. அவரது தீர்ப்புகள், நல்ல பலனை அளித்திருக்கின்றன என்பதை மற்ற நீதிபதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். அவர் விதித்த புதுமையான தண்டனைகள் சில!

திருடும் பழக்கமுள்ள ஓர் இளைஞன், ஒரு நீண்ட கவிதையை மனப்பாடம் செய்ய வேண்டுமென தண்டனை விதிக்கப்பட்டது.

பிராணிகளுக்கு தொல்லை கொடுத்த சிறுவன், பேரறிஞர் ஆல்பிரட் சுவைட்ஸர் எழுதிய 'தத்துவ நெறிகள்' என்ற நூலிலிருந்து 40 பக்கங்களுக்கு கையினால் 'பார்த்து' எழுத வேண்டியதாயிற்று. மற்றொரு இளங்குற்றவாளி, ஓர் ஆஸ்பத்திரியில் தோட்ட வேலை செய்ய வேண்டுமென தண்டிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டி இருபாதசாரிகள் மீது ஏற்றிக்கொன்ற ஓர் இளைஞனுக்கு தண்டனை என்ன தெரியுமா? சனி, ஞாயிறுக் கிழமைகளில் ரைன் ஆற்றின் கரையோரமாக ரோந்து சுற்றி ஆற்றில் தவறி விழுகிறவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அவனுக்கு 'தண்டனை' விதிக்கப்பட்டது. சனி, ஞாயிறு மட்டுமன்றி மற்ற நாட்களிலும் 'உயிர் காக்கும்' இப்பணியை இளைஞன் விருப்பத்துடன் மேற்கொண்டான். இருவரை சவக்குழிக்கு அனுப்பிய இளைஞன், சவக்குழிக்குப் போகாமல் பலரைக் காப்பாற்றும் அரிய பணியில் இறங்குகிறான் என்றால், 'தண்டனை' புரியும் விந்தை அன்றோ!

# "உங்களால் உருவாக்க முடியாது"

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில், இரஷ்யாவிலிருந்து கலாசாரத் தூதுக்குழுவினர் சென்னைக்கு வந்திருந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்ததுடன், சென்னையின் முக்கிய பகுதிகளையும் என். எஸ். கே. அழைத்துச் சென்று காண்பித்தார்.

சென்னையிலுள்ள படப்பிடிப்பு நிலையங்களில் பெரிய தான வாகினியையே காட்டுவோமே' என்று கருதி, என். எஸ். கே. அங்கு அவர்களை அழைத்துச் சென்றிருந்தார்.

அப்போது, படப்பிடிப்புக் கருவியை உங்கள் நாட்டில் எந்தப் பகுதியில் தயாரிக்கிறீர்கள்?' என்று அவர்கள் கேட்டனர்; அதற்கு என். எஸ். கே., 'இது அமெரிக்காவில் செய்யப்பட்டது' என்று தெரிவித்தார்; கண்ணாடியைக் காட்டி, 'இது உங்கள் நாட்டில் எந்தப் பகுதியில் தயாரிக்கப்படுகிறது?' என்று வினவப்பட்டதற்கு, 'இது பெல்ஜியத்தில் செய்யப்பட்டது' என்று அவர் பதிலளித்தார்; கடிகாரத்தைக் காட்டிக் கேட்டனர்; இது 'சுவிட்சர்லாந்தில் செய்யப்பட்டது', என்றார் அவர்; படச்சுருளைக் காட்டிக் கேட்டனர்; 'பிரான்ஸ் அல்லது சுவிட்சர்லாந்தில் செய்யப்பட்டது' என்று கலைவாணர் கூறினார்; 'இப்படியே கேட்டுக் கொண்டே போகாதீங்க; சுற்றிலுமுள்ள நாலு சுவர்களை நாங்கள் எழுப்பியிருக்கிறோம்; காரின் நாலு டயர்களில் காற்றடிப்பது நாங்கள்- அவ்வளவுதான்' என்று கலைவாணர் கூறினார்; 'அப்படியானால் உங்களுக்கென்று ஒன்றும் கிடையாதா?' என்று இரஷியக் குழுவினர் வினவினர்; அதற்கு, 'இருக்கிறது; அதனை மாலையில் தருகிறேன்' என்று கலைவாணர் தெரிவித்தார்.

'நீங்கள் விரும்பத்தக்க-ஆனால் உங்களால் உருவாக்க முடியாத உலகம் என்கைக்குள்ளே இருக்கிறது' என்று குழுவினரிடம் கலைவாணர் தெரிவித்தார்; 'கைக்குள்ளே உலகமா? அது என்ன?' என்று அவர்கள் வியப்புடன் கேட்டனர்; அதற்குக் கலைவாணர், 'அதுதான் திருக்குறள்; இதற்கு ஈடானது உங்களிடம் கிடையாது; இனியும் கிடைக்கப்போவதில்லை; அப்படியே நீங்கள் உருவாக்கினாலும், 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற பெருமை அதற்குக் கிட்டாது' என்று கூறினார்.

# நீங்கள் ஒரு கணக்குப்புலியா?

9-7-66ம் திகதி வளர்மதியில் இடம்பெற்ற நீங்கள் ஒரு கணக்குப் புலியா என்றதுணுக்குக்கு சரியான விடை எட்டு சிகரெட்டுக்கள்.

சரியானவிடை. அனுப்பிய மருமக்கள் பெயர்கள் வருமாறு:—

ஏ. பி. சந்திரநாதன், சா. அன்ரன் ஜெயக்குமார், த. அருமைநாயகம், தி. சுந்தரராஜா, ஞா. ஞானகுணாளன், க. கேதீஸ்வரன், ஜெ. திருக்குமார், மு. முகம்மது இபுராகிம், நா. சிவேந்திரன், மு. இராசேஸ்வரன், வே. சிவகுருநாதன், சிவா. சந்திரன், பா. தங்கத்துரை, த. மகேந்திர ஜோதி, அ. கருணாகரன், சி. செல்வச்சந்திரன், பி. சி. பி. ஞானதுரை, எம். மொஹிதீன், நாயகநேசம் தம்பிராசா, எஸ். ரவீந்திரன், கந்த. ஞானமுத்தன், ச. ஆனந்தராசா, றமிலா றெஜி. ரி. மதுபாலசிங்கம், க. துரைநாயகம், ஞா. சஞ்சயன், தி. சிவலோகநாதன், மகேந்திரராணி நடராசா, சோ. சண்முகநாதன், எஸ். வி. பொன்கலன், க. மயில்வாகனம், வி. கே. மூர்த்தி.

பெர்னாட்ஷா வாழ்வில்……2

# பஞ்சம் வந்ததன் காரணம்

— சி. சண்முகலிங்கம் —

அறிஞர் பெர்னாட்ஷா என்றதும் சிலர் மனதில் அவர் எழுதிய நாடகங்களே நினைவுக்கு வரலாம். ஆனால் பலருக்கு அவர் 'உடன் பிறந்த நகைச்சுவை நிகழ்ச்சிகளே' நினைவுக்கு வரும். இவருடைய போக்கையும், கொள்கையையும்ஆராய்ந்தால் அவரின் கள்ளமற்ற தன்மை புலப்படும். இதனால் அவரிடம் மக்கள் அளவற்ற அன்பைக் கொண்டிருந்தனர்; அவரின் புத்திக் கூர்மையை எண்ணி வியந்தனர். அவரை மடக்கி அவரின் புத்திக்கூர்மையை தோற்கடிக்க வேண்டுமென்ற ஆசை கொண்டவர்களில் பலர் அவரின் உற்ற நண்பர்களேயாம். ஆனால் அவரோ அவர்களைத் தன் நகைச்சுவை மிகுந்த பேச்சுக்கள் மூலம் மடக்கி விடுவார். சில அறிஞர்கள் கூட அவரின் நகைச்சுவைப் பேச்சுக்களின் முன் தலைகவிழ்ந்ததுமுண்டு.

இங்கிலாந்தின் முதுபெரும் அறிஞரான ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் பெர்னாட்ஷாவின் உற்ற நண்பர்களில் ஒருவராகும். செஸ்டர்டன் சற்றுப் பருமனானவர். ஆனால் ஷாவோ உடம்பில் கொழுப்பு ஏறாமல் மிக விழிப்பாக இருந்து நடைமுதலான பயிற்சிகளால் உடம்பை மிக ஒல்லியாக வைத்துக் கொண்டார். செஸ்டர்டன் ஷாவை மடக்க எண்ணி ஷாவை நோக்கி 'உன்னை யாராவது பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் வந்திருந்ததாக எண்ணிக் கொள்வார்கள்' என்று கூறி அவரை மட்டம் தட்டினார்.

ஆனால் ஷாவிடுவாரா? செஸ்டர்டனைப் பார்த்து போட்டாரே ஒரு போடு. 'உன்னைப் பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் வந்ததற்குக் காரணமும் தெரிந்து கொள்வார்கள்' என்றார் ஷா. உடனே ஷாவை மடக்க நினைத்த செஸ்டர்டன் தானே மடங்கித் தலை குனிந்தார்.

# இவ்வாரக் கேள்வி

சுந்தரம் வீட்டுக்கு சில விருந்தாளிகள் வந்தனர். அவர்களை சுந்தரம் உபசரித்து சில கதிரைகளை அமரும்படி கொடுத்தான். வந்த விருந்தினர்கள் ஒவ்வொருவராக அமர்ந்தனர். ஆனால் ஒருவர் மிஞ்சிவிட்டார். சுந்தரம் அவர்களை ஒரு கதிரையில் இருவர் விதம் இருக்கச்சொன்னான். அப்படியே அவர்கள் செய்தனர். ஒருவரும் மிஞ்சவில்லை. அப்படியானால் சுந்தரம் வீட்டிற்கு வந்தவர்கள் எத்தனை பேர், போட்ட கதிரைகள் எத்தனை?

இக்கேள்விக்கு விடை அனுப்பும் மருமக்கள் பின்வரும் முகவரியை வெட்டி கடித உறையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அப்படி வராத விடைகள் கவனிக்கப்பட மாட்டாது.

கணக்குப் போட்டி
C/o/பா,
வளர்மதி மாமா,
சுதந்திரன்,
த. பெ. இல: 1183,
கொழும்பு-12.

சரியான விடை அனுப்பும் மருமக்களின் பெயர்கள் வளர்மதியில் இடம்பெறும்:-

அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது
ஓடிப் போனவன்
புதிய தொடர் கதை
நவசோதி எழுதுகிறார்




புரட்சியாலன்,
வேலணை-4.

கே: ஐ. நா. சபைக்கு சென்று திரும்பிய தனிப்பெரும் தலைவர் அங்கு சாதித்தவைபற்றி சுருங்க கூறுங்கள்?

ப: முன்கூட்டியே எழுதிக் கொண்டுபோனவைதச்சபைக் கூட்டத்தில் வாசித்தாராம்.

ஃ

ஆர். குணசேகரன்,
திருமலை.

கே: சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையே, ஏன்?

ப: தமிழ்பேசும் மக்கள் ஏகோபித்துக் குரல் எழுப்பும்போது ஒருமூலையிலிருந்து ஒருசிலர் எதிர்ப்புக் குரல் எழுப்பக்கூடாது என்பதற்காக.

ஃ

பி. எஸ். மணியம்,
மட்டக்களப்பு

கே: முன்னாள் அரசாங்கங்களால் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்களின் கதி என்ன? நான் இலங்கைப் பெண்ணை கலியாணம் முடித்து இருக்கிறேன்.

ப: அவர்கள்தான் நாடற்றவர்கள்! அவர்களில் 5½ லட்சம் பேர் நாடுகடத்தப்படுவர். 3 லட்சம் பேர் இலங்கைப் பிரசாவுரிமை பெறுவர். 1½ லட்சம் பேர் நாடற்றவர்களாக தொடர்ந்திருப்பர். இலங்கைப் பிரசை ஒருவரை மணமுடித்திருந்தால் வெளிவிவகார இலாகாவுக்கு மனுச் செய்து இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற முயற்சி செய்யுங்கள்.

ஃ

பொ. கணேசன்,
கல்முனை-3

● கே: தற்பொழுது தமிழரசுக் கட்சியின் பால் ஐக்கிய தேசியக் கட்சிகாட்டும் ஐக்கிய மனோபாவம் சுதந்திரக் கட்சி காட்டினால் இன்றைய இலங்கையின் நிலை எப்படியிருக்கும்?

ப: ஐ. தே. கட்சி எதிர்க்கட்சியிலிருக்கும். நடவாதது நடக்குமென கனவு காண வேண்டாம்.

ஃ

கந்த. ஞானமுத்தன்,
கைதடி

கே: பல்கலைக் கழகம் அமைப்பதற்கு ஏற்ற முடிவு இல்லையாமே?

ப: சில முட்டுக்கட்டைகளால் த. பல்கலைக் கழகம் அமைத்தல் தாமதமாகலாம். நல்ல காரியத்துக்கு தடங்கல் ஏற்படுவது இயற்கையே, யார் தடுத்தாலும் தேசிய அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் த. பல்கலைக் கழகம் நிச்சயம் நிறுவப்படும்.

ஃ

வி. இன்னாசிமுத்து,
வேலணை

கே: சதா காதல் காதல் என கேள்விகள் கேட்கிறார்களே இதைப்பற்றி உமக்குசலிப்புஉண்டாவதில்லையோ?

ப: இதர தேசியப் பிரச்சினைகளைப்போல காதலும் ஒரு பிரச்சினையாகநாட்டிலே வளர்ந்துள்ளது. இது சிலரின் உயிருக்கே உலைவைப்பதால் இதற்குத் தீர்வுகாண்பதற்காக கேள்வி கேட்கின்றனர்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-12.

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.

செ. நவரெத்தினராசா,
கொட்டாஞ்சேனை

கே: பொ. கட்சியின் மகாநாட்டுக்கு பிரதம மந்திரியவர்கள் சமூகமளிப்பாரா?

ப: பொ. கட்சியும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்திருப்பதால் பிரதமர் அழைப்பை நிராகரிக்கவில்லை.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை

கே: இடதுசாரிகளில் ஒரு சிலர், வட பகுதிக்கு வந்து போயுள்ளார்களே!

ப: ஜனவரி 8-ந் திகதியை மறந்துவிடும் அளவுக்கு வட பகுதி மக்கள் ஞாபக சக்தி குறைந்தவர்களென்று அவர்கள் தப்புக் கணக்கு போட்டிருக்கலாம். இந்நாட்டுத் தமிழ் மக்கள் மார்க்சியத்தின் விரோதிகள்—மார்க்ஸீய வாதிகளின் எதிரிகள் என்பதை மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு உணர்த்தும் காலம் வெகு தூரத்திலில்லை.

ஃ

சி. ஞானம்,
கண்டி

கே: ஒரு பல்கலைக் கழக மாணவி எப்படிப்பட்ட காதலனை விரும்புவாள்?

ப: அடிக்கடி ஆங்கிலப் படத்துக்கு அழைத்துச் செல்பவனை.

ஃ

ஆர். ஆர். இராமநாதன்,
கொழும்பு-11.

கே: ஒருவரிடம் பேசும் போது எந்தப் பாணியில் பேச வேண்டும்?

ப: உங்களைப் பற்றியே அதிகம் பேசுவதை தவிர்த்துவிடுங்கள். சம்பாஷணையின் போக்கு உங்களைத் தொடும் போது அதனை வேறுதிசையிற் திருப்பிவிடுங்கள்.

ஃ

செ. நவரத்தினராசா,
கொட்டாஞ்சேனை

கே: எங்கள் நீதி அமைச்சர் எத்தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்?

ப: நீதி அமைச்சர் மூதவை உறுப்பினர். வாக்கு வேட்டையை எதிர்பார்க்காமல் நீதியை நிலைநாட்ட வேண்டியவராக இருப்பதால் நீதி அமைச்சர் மூதவை உறுப்பினராகவே இருப்பார். இது சோல்பரி அரசியற் சட்டத்தில் கண்டுள்ளது.

ஃ

எஸ். மூர்த்தி,
நீர்கொழும்பு

கே: நான் ஒரு பத்தினியை மணக்க விரும்புகிறேன். அப்படிப் பெண் கிடைப்பாளா?

ப: பத்தினியை எப்படி மணக்க முடியும்? கலியாணமாக முன்பு ஒரு பெண் எப்படி பத்தினியாக இருக்க முடியும்? கலியாணத்திற்கு பிறகுதானே ஒரு பெண் பத்தினியாகிறாள்.

ஃ

வி. டி. கணேசன்
கொழும்பு-5

கே: இன்று செய்யவேண்டியதை நாளைக்கு ஒத்திப் போட வேண்டாம் என்று சிலர் உபதேசம் - செய்கிறார்களே! ஒருநாள் ஒத்திப் போவதால் குடி முழுகிப் போய்விடுமா, என்ன?

ப: ஒருநாள் ஒத்திப்போட்டாலும் சில தடங்கல் ஏற்படக் கூடும். இன்று என்பது ரொக்கப் பணம்-ஆனால் நாளை என்பதோ ஒரு கடன் பத்திரம்.

SATHYALAYAM'S
KASA NASINI
காச நாசனி

"காச நாசனி" எல்லாவித மான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானாலும், கடுமையானதானாலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரூங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்றதிச்யாய தகோகாஸ: காஸால் ஸம்ஜாயதேஹய"

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனாகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள் விகிதம் தினம் மூன்று முறை.
விலை: 1 அவு. போ. ரூ. 5/-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
60, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.



ஒருதலைக் காதல்!

தமிழ் மங்கை வெறுத்தாலும் அவளை நாங்கள் காதலிக்கிறோம்.

—பீட்டர் கெனமன்

-பொருந்தாக் காமம், கைக்கிளை என்றெல்லாம் பழந்தமிழிலக்கியத்தில் கூறப்படுகிறது. என்றாலும் மனமொத்த காதலர்களுக்கிடையில் தலையிடும் வில்லன்கள் இறுதியில் படும் பாட்டை திரைப்படங்களில் பார்த்தாவது திரு. பீட்டர் கெனமன் தெரிந்து கொள்ள முன்வருவாரென தமிழ் மங்கை எதிர்பார்க்கிறாள்.

இப்படி இருக்குமோ?

வவுனியாவில் நடைபெறவிருந்த தமிழ் காங்கிரஸ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

—செய்தி

—இந்த மாற்றத்துக்குக் காரணம், பொ. கட்சியைச் சேர்ந்த யாழ். அகற்றுச் சங்கத் தலைவர் திரு. சிவசிதம்பரத்தின் எதிர்ப்பாக இருக்குமோ என சந்தேகிக்கிறார் ஒரு பொ. கட்சி ஆதரவாளர்.

சொந்தத் தேங்காயா?

இந்துப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென நான் வலியுறுத்துவதற்குக் காரணம், பெரியோர்களால் கைவளிக்கப்பட்ட தர்மசாதனங்களைப் பயன்படுத்திப் பாதுகாக்கவே!

—ஜீ ஜீ.

—வழித்தேங்காயெடுத்து தெருப்பிள்ளையாருக்கு உடைக்கும் திரு. பொன்னம்பலம், இந்துப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு தனது சொத்தில் எவ்வளவு கொடுத்திருக்கிறார் என்று வினவுகிறார் எக்கட்சியிலுமே சேராத ஒரு இந்து!

அலுத்து விட்டார்!

தாராசிங் இனி சினிமாவில் நடிக்கமாட்டார்

—செய்தி

—நிஜமாகவே எதிரிகளுடன் மோதி அவர்களைப் பதம் பார்க்கும் மல்லர் தாராசிங்குக்கு திரைக் கதாநாயகர்களுடன் போலிச் சண்டை போட்டு அலுத்துவிட்டது போலும்!

வேலியும் ஒணானும்!

இந்தியாவைத் தாக்கும் எண்ணம் சீனாவுக்குக் கிடையாது.

—பாகிஸ்தான்

—வேலிக்கு ஓணான் சாட்சி

புதிய விளக்கம்!

'தி. மு. க. முகமூடி அணிந்த காங்கிரஸ்'

—வலதுசாரி கம்யூனிஸ்ட்

—இராஜாஜியோ, காங்கிரசை, 'முகமூடியணிந்த கம்யூனிஸ்ட்' என்கிறார். வலதுசாரி கம்யூனிஸ்டுகளோ தி. மு. க. வினரை 'முகமூடியணிந்த காங்கிரஸ்' என்கின்றனர். எனவே, தி. மு. க. தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்று விளக்கம் அளிக்கிறார் ஒரு தி. மு. க. ஆதரவாளர்.

பொய்யரும் புரட்டரும்!

உப உணவுப் பொருள் உற்பத்திக்கு யாழ்ப்பாண மண் பொருத்தமானது.

—ஆராய்ச்சியாளர் அறிக்கை

—உப உணவுப் பொருட்களை மட்டுமல்ல உணர்ச்சி மிக்க உண்மைத் தலைவர்களையும் உற்பத்தி செய்த யாழ்ப்பாண மண், அரசியலில் ஒரு சில பொய்யர்களையும் புரட்டர்களையும் இன்னும் விட்டுவைத்திருக்கிறதே என்று வேதனைப்படுகிறார் யாழ்ப்பாணத் தொகுதியைச் சேர்ந்த ஒரு வாக்காளர்.

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி

சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது



786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

# மக்கள் மொழியே நிர்வாக மொழி

# எதிர்க்கட்சியினர் குழப்பத்துக்கு டாக்டர் இ. மு. வி. விளக்கம்

**“நிர்வாக மொழி, ஆட்சி மொழி இரண்டும் வேறு வேறானவை. நிர்வாகம் துரிதமாக நடைபெற வேண்டுமென்றால் அது மக்கள் மொழியிலேயே நடைபெற வேண்டும். வரலாற்றுக் காலம் முதல் நிர்வாக மொழி மக்கள் மொழியாகவே இருந்து வந்திருக்கிறது. ஆட்சி மொழி அதிகாரிகளுக்கிடையே பரிமாறலுக்காகவும் அரசு தனது கௌரவத்தை பாதுகாப்பதற்காகவும் வேற்று நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் மொழியாகவும் ஆட்சி மொழி இருந்து வந்திருக்கிறது” இவ்வாறு சனப்பிரதிநிதிகள் சபையில் இம்மாதம் 18ம் திகதி உரை நிகழ்த்திய வைத்திய கலாநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் குறிப்பிட்டார்.**

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

‘அரியணை உரை மீது எதிர்க்கட்சியினர் குறிப்பிட்ட இரண்டு மூன்று விடயங்களை விட்டுப் பேசுவதற்காகவே நான் பொறுப்புணர்ச்சியுடன் எழுந்து நிற்கிறேன். கொழும்பு மத்தியின் மூன்றாவது பிரதிநிதி அவர்கள் மொழிப்பிரச்சினையை விட்டும், ஒற்றுமையையிட்டும் பேசியிருந்தார். அப்பிரச்சினைகளையிட்டு எனது பேச்சின்போது குறிப்பிடுகிறேன். உண்மையில் அவரது பேச்சில் எத்தகைய தகுதியும் இல்லை. என்றாலும் அவர் கூற முற்பட்ட சில விடயங்களையிட்டு நானும் கருத்துக் கூற விரும்புகிறேன்.

‘மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அவர்களை ஒத்தவர்களும் இப் பிரச்சினையின் மிக ஆரம்ப நிலையையே விளங்கிக் கொள்ளவில்லை. இப் பிரச்சினையையிட்டு ஆராய முற்படும் பொழுது ஐந்து உண்மைகளை நாம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் முதலில் இருந்து வரும் தேசிய மொழிகள். இலங்கையில் இரண்டு தேசிய மொழிகள் உள்ளன. (குறுக்கீடுகள்) இரண்டாவதாக ஆட்சிமொழியின் இலக்கணம் என்ன? மூன்றாவதாக நிர்வாக மொழி என்றால் என்ன? நிர்வாக மொழிதான் ஆட்சி மொழி என்று கூற வேண்டிய அவசியம் இல்லை. இப் பிரச்சினையில், இன்றைய எதிர்க் கட்சியினரை விட விவேகம் நிறைந்த மறைந்த திரு. பண்டாரநாயக்கா அவர்களே ஆட்சி மொழிக்கும், நிர்வாக மொழிக்கும் உள்ள வரம்பையிட்டு விளக்கம் கூறியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

### பண்டா தந்த விளக்கம்

‘இன்று நிர்வாகம் பொது. சேவை மூலம் நடைபெற வேண்டியிருக்கிறது. அன்று இருந்த இந்த முறையை நாம் அரசாங்க சேவையென அழைத்தோம். பொது சேவைக்கும், அரசாங்க சேவைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மொழிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுபவர்கள் இவற்றையிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் இரண்டு தேசிய மொழிகள் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. தேசிய மொழிகளின் வளர்ச்சிக்காக 1956 வரை தேசிய மொழிகள் திணைக்களம் இருந்தது. பெரும் பான்மையினர் சிங்களமொழியையு ஏனையவர்கள் தமிழ் மொழியையும் பேசுகிறார்கள்.

அப்படியாயின் ஆட்சி மொழி என்றால் என்ன? நிர்வாகத்தினர் தம் மத்தியில் பயன் படுத்தும் மொழியே ஆட்சி மொழி என்று மறைந்த திரு. பண்டாரநாயக்க விளக்கம் கூறியுள்ளார்.

‘இந்த நாட்டில் ஆட்சி மொழி எப்படிப்பயன்படுத்தப் படுகிறது என்று பார்ப்போம். முடியாட்சி காலத்தில் மன்னர்களின் தாய்மொழியே நீதியன்ற மொழியாக இருந்தது. 350 வருடங்களுக்கு மேலாக கண்டிய மன்னர்களின் நீதிமன்ற மொழியாக தமிழ் இருந்திருக்கிறது. இதற்குப் போதிய ஆதாரம் உண்டு. ஆனால் இதுதான் நிர்வாக மொழி என்று நான் கருதவில்லை. அப்பொழுது சனநாயகம் இருக்கவில்லை. மக்களும் மன்னர்களின் மொழி பற்றிக் கவலைப்படவில்லை.

### ஆட்சி மொழியும் நிர்வாக மொழியும்

‘பின்னர் அன்னிய ஆட்சி வந்தது. அவர்கள் தங்கள் மொழியிலேயே காரியங்களைச் செய்தார்கள். மக்களுடன் அவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. விதானைமார் மூலமே மக்களுடன் தொடர்பு கொண்டார்கள். இதனால் மக்கள் எம் மொழியையிட்டும் கவலைப்படவுமில்லை.

‘நிர்வாகம் துரிதமாக நடைபெற வேண்மென்றால் அது மக்கள் மொழியில் நடைபெற வேண்டும். வரலாற்றுக் காலம் முதல் நிர்வாக மொழி மக்கள் மொழியாகவே இருந்து வந்திருக்கிறது. ஆட்சிமொழி அதிகாரிகளுக்கிடையே பரிமாறலுக்காகவும் அரசு தனது கௌரவத்தை பாதுகாப்பதற்காகவும் வேற்று நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் மொழியாகவும் ஆட்சி மொழி இருந்து வந்திருக்கிறது.

‘அன்று அரசாங்க ஊழியர்கள் மன்னர்களின் சேவகர்கள். இன்று அவர்கள் மக்களின் சேவகர்கள் எனவே அவர்கள் மக்கள் மொழியில் நிர்வாகத்தை நடாத்தத் தெரிந்திருக்க வண்டும். மக்களுக்கான நிர்வாகம் என்பது பற்றிப் பேசுகையில் மாவட்ட சபைகள் என் நினைவுக்கு வருகிறது.

‘மாவட்ட சபைகள் தமிழர்களுக்கு மட்டுமே என்ற தவறான கருத்து கூறப்படுகிறது. மாவட்ட சபைகள் முழு இலங்கைக்குமே உரியது. பழைய காலனித்துவ நிர்வாக முறையே இன்றும் தொடர்ந்திருக்கிறது. இம் முறை மாற்றப்பட்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். அதிகாரம் பரவலாக்கப் பட்டாலே நிர்வாகம் மக்கள் நிலைக்கு இறங்கி வரும். அப்பொழுது தான் உண்மையான மக்கள் ஆட்சி நிலவும்.

### மாவட்ட சபைகள்

‘மக்களுக்கு இன்று ஆட்சியுடன் உள்ள ஒரே தொடர்பு ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை வாக்களிப்பது மட்டுமே. இதனால் மக்கள் ஆட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முடியவில்லை. பலமைல் பிரயாணம் செய்து வர வேண்டியிருக்கிறது. கல்வி அமைச்சருக்கு ‘சலாம்’ போடுவதற்கு. மாவட்டசபைகள் ஏற்பட்டால் மக்களுக்கு இத்தனை கஷ்டம் இருக்க மாட்டாது.

‘தேசிய முன்னேற்றத்தில் யாருக்குமே கவலையில்லை’ இதனால் தான் கடந்த அரசாங்க காலத்தில் பாழான அமைச்சர்களையும், நிர்வாக முதல்வர்களையும் பார்த்தோம். மாவட்ட சபைகள் ஏற்பட்டால் ஒன்றையொன்று பார்த்து முன்னேற்றம் ஏற்படும். மக்களுக்கும் தேசிய முன்னேற்றத்தில் அக்கறை ஏற்படும்.

“மாவட்டசபை இலங்கை முழுவதற்கும் பொதுவானது. இதனால் கூடுதலான லாபம் அடைபவர்கள் சிங்கள மக்களே. இன்று மாவட்டசபைகள் கூடாது என்று கூறுபவர்கள் அவர்களின் அரியணை உரைகளிலேயே மாவட்ட சபைகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்று அவர்களின் நாக்கு எங்கே போய்விட்டது என்று கேட்கிறேன்.

“இன்று ஆசிரிய இடமாற்றங்கள் நடை பெறுகின்றன. கல்வி அமைச்சர் தனது விருப்பத்திற் கேற்ப மாற்றங்களைச் செய்கிறார். மாற்றப்பட்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஓடிவருகிறார்கள். மாவட்ட சபைகள் வந்தால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை.

“ஒற்றுமை பற்றிய பிரச்சினைக்கு இப்பொழுது வருவோம். ஒற்றுமை என்பது பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட வேண்டுமென்று கூறுவது தவறு. கட்சிகள் இருக்க வேண்டும். அன்றேல் பாராளுமன்றம் ஏன்? சனநாயகம் இல்லாது போய்விடும். ஒற்றுமை என்பது பலதரப்பட்ட மக்களுக்கிடையில் ஏற்பட வேண்டும். சிறுபான்மையினரும் இந்த அரசாங்கத்தில் எமக்கும் பங்கிருக்கிறது என்று உணர வேண்டும். இது தான் ஒற்றுமை.

“கடந்த பத்து ஆண்டுகளாக இந்த நாட்டில் ஒற்றுமையில்லாதபடியினால் நமது பொருளாதாரம் பாழ்பட்டது. நாம் எத்துறையிலும் முன்னேற முடியாது போய் விட்டது. இப்பொழுது நிலைமைமாறிவிட்டது. நான் சென்ற ஆண்டு இங்கிலாந்து சென்றிருந்த பொழுது பலரைச் சந்தித்தேன். அவர்கள் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையைப் பாராட்டினார்கள். அத்துடன் நமக்கு உதவி வழங்குவதாகவும் கூறினார்கள்.

“இன்று ஒற்றுமை பற்றிப் பேசும் கொழும்பு மூன்றாவது பிரதிநிதி அவர்கள் தான் சனவரி 8ம் திகதியன்று விகாரமாதேவி சிலை முன் சென்று சத்தியம் எடுத்தவரும் கூட. சாதாரண உரிமைகளை வழங்குவதற்கே இவர்கள் இத்தனை எதிர்ப்புக் காட்டுகிறார்கள். இவர்களுக்கு மொழிப் பிரச்சினை தீர்க்கப்படுவதில் விருப்பமில்லை, இப்பிரச்சினையை வைத்து அதிகாரத்தை மீண்டும் பெற முடியாதா என்று இவர்கள் ஏங்குகிறார்கள். நாங்கள் அதிகாரத்தை மக்களிடம் கொடுக்க விரும்புகிறோம். எதிர்க்கட்சியினர் அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருக்க விரும்புகிறார்கள்.

### 8-ம் திகதி வேலை நிறுத்தம்

“மாவட்ட சபைகளுக்கு தான் நூறு விகிதம் ஆதரவு கொடுப்பதாக எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி ஒரு மாதத்துக்கு முன்னர் இச் சபையில் கூறினர். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் மறந்து உண்மை பேசுவதும் உண்டு.

“இன்று தொழிலாளரி பற்றியும் தொழிற் சட்டங்கள் பற்றியும் பேசும் எதிர்க் கட்சி நண்பர்கள் ரஷ்யாவிலும், சீனாவிலும் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள் இல்லை. அங்கு தொழிற்சங்கங்களே கிடையாது. யாராவது வேலை நிறுத்தம் செய்தால் அங்கு சுடப்படுவார்கள். ஆனால் சனவரி 8-ம் திகதி இந்த நாட்டில் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. வேலை நிறுத்தம் செய்தவர்களை அரசாங்கம் தண்டித்ததையிட்டு எதிர்க்கட்சியினர் ஆத்திரப்படுகிறார்கள். இந்த வேலைநிறுத்தம் ஒரு அரசியல் வேலை நிறுத்தம் சனநாயக சம்பிரதாயத்திற்குமுரணான வேலை நிறுத்தம்’ வெளியாரின் தூண்டுதலின் பேரில் நடைபெற்ற வேலை நிறுத்தம்.

“எதிர்க்கட்சியினர் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் பிரச்சினைகளுக்கு அவர்களே காரணம் என்பதை. நாம் முற்போக்குக் கொள்கை உடையவர்கள். நமது அரசாங்கம் முற்போக்கு அரசாங்கம். நாம் தேசிய ஒற்றுமையிலும், தேசிய முன்னேற்றத்திலும் குறிப்பிடக் கூடிய சாதனையை நிலைநாட்டி விட்டோம். மந்திரத்தினால் மாங்காய் விழுத்துவதாக நாம் கூறவில்லை. நமது முன்னேற்றக் கொள்கைகளின் பலனை சில ஆண்டுகளில் நீங்கள் காண்பீர்கள்.”


## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?

★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?

★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**

அன் கம்பெனி,

தலாவ (வழி) அநுராதபுரம்.



## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் “ஆனந்தா தைலத்தை” த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


## கதிர்காம யாத்திரிகர் குழு

கொழும்பு விவேகானந்த சபை வழமை போல இவ்வாண்டும் கதிர்காம யாத்திரைக்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

யாத்திரிகர் குழு 30-7-66 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு சபை அலுவலகத்திலிருந்து புறப்பட்டு தீர்த்த திருவிழாவையும் தரிசித்த பின்னர் 2-8-66 செவ்வாய் மாலை கொழும்பு திரும்புவார்கள்.

யாத்திரையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் உடனடியாக பொதுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய பணத்தைச் செலுத்தி ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## உடுப்பிட்டியில் சுந்தரர் குரு பூசை

உடுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் ஆதரவின் கீழ் உடுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில், இம் மாதம் 25-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை அதிவிமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

இக் குரு பூசை விழாவில், சங்கீதக் கச்சேரி, கூட்டுப் பிரார்த்தனை, உபந்நியாசம் முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

# 'தேசிய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்வரை தமிழ்பகுதிக்கு சிங்கள ஆசிரியர் நியமனமில்லை'

## 'ஜனதின' கூறுகிறது

"சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்குத் தமிழ் ஆசிரியர்களை நியமிக்கும் வரை வட, கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு இடமளிப்பதில்லையென்று தமிழரசுக் கட்சி முடிவு செய்திருப்பதால், இந்த 7-கட்சி கூட்டரசாங்கம் இருக்கும் வரை வட, கிழக்கு மாகாணங்கட்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பவே முடியாது என்று கல்வி இலாகா கூறுகிறது" இவ்வாறு ஒரு செய்தியை ஜனதின 18-7-66ந் திகதி பிரசுரித்துள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

'அடுத்த தவணை முதல் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்வதாக கல்வி அமைச்சர் இரிய கொல்ல கொடுத்த வாக்குறுதி புஸ்வாணமாகும் நிலை உருவாகியுள்ளது.

'அந்த ஆசிரியர்களை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்குக் காரணம் தமிழரசு வாதிகள் பிரதமர் மூலம் கொண்டு வந்துள்ள நிர்ப்பந்தமே என்று கல்வி திணைக்களத்தின் உயர்தர அதிகாரி ஒருவர் கூறினர்'

## சிவாஜி வருகிறார்

"இவ்வாண்டு இறுதிக்குள் தென்னிந்திய சினிமா நடிகர், நடிகைகள், பெருந்தொகையானோரை இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், அமைச்சர் திருச்செல்வத்தின் பாரியார் இதனைச் செய்து கொடுத்திருப்பதாகவும் அறியப்படுகிறது" இவ்வாறு ஒரு செய்தியை எத்த 19-7-66 ந் திகதி பிரசுரித்துள்ளது.

"புதிதாக நடிகர், நடிகைகளை இங்கு அழைப்பதற்கான ஸ்தாபன ரீதியான ஏற்பாடுகளையும், பிரசார நடவடிக்கைகளையும் மலைநாட்டில் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டனர். இதற்கிடையே திருமதி திருச்செல்வம் சில தினங்களுக்கு முன்பு மலை நாட்டில் தோட்டப் பகுதிகள் சிலவற்றில் சுற்றுப் பிரயாணம் செய்து, ஒரு தொகுதிக்கு ஒரு மாதர் பிரதிநிதி வீதம் தெரிவு செய்துள்ளார்.

"ஆரம்ப நடவடிக்கையாக இம்மாதம் 30, 31ந் திகதிகளில் தென்னிந்திய நடிகர் நடிகைகளான சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி முதலியோர் பதுளைக் குதிரைப் பந்தயத் திடலில் நடைபெறும் ஒரு விழாவில் பங்கு பற்று வதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது."

## எதிரிகளுக்கு சட்ட உதவி

"சதி வழக்கு எதிரிகளுக்கு இலவசமாகக் கட்டணமின்றி வழக்கறிஞர்களின் உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாட்டின் முற்போக்கு வழக்கறிஞர்களும், ஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்கின்றன. இதற்காக முற்போக்கு வழக்கறிஞர்கள் ஏற்கனவே கூடிப்பேசியுள்ளனர் இன்னும் இரண்டொரு நாளில் அவர்கள் எதிரிகள் சார்பில் வாதாடும் வழக்கறிஞர்களைத் தெரிவு செய்வர். சட்ட உதவி அளிக்கக் காரணம் எதிரிகளில் ஒரிருவர் தவிர ஏனையோர் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த ஏழைகளாயிருப்பதால் திறமையான வழக்கறிஞர்களை அமர்த்த முடியாமலிருப்பது தான் என்று ஒரு வழக்கறிஞர் கூறினர். முதலாவது எதிரியான வண. ஹேன்பிட்ட கெதர ஞானசீகதேரோவுக்கு உதவி செய்வதற்காக நாட்டில் பிரபல பௌத்த சங்கங்கள் பல செயலாற்றுகின்றன. எதிரிகள் எல்லோரும் சிங்கள பௌத்தர்களாயிருப்பதால், இச் சங்கங்கள் சாத்தியமான உதவிகள் செய்வது பற்றி ஆலோசிக்கின்றன."

— ஜனதின (19-7-66)

## சிங்கள இதழ்களில் . . .

# "தமிழரசு நிறுவ யு.என்.பி. இணக்கம்"

### சிங்களத் தினசரியின் தலையங்கம்

'தேசிய அரசாங்கம் என்னும் இந்த அரசாங்கம் வகுப்புவாத நடவடிக்கைகளை, மூடி மறைத்து இரகசியமாகச் செய்து கொண்டு போகிறது. தமிழரசு கட்சியின் இலட்சியம் இலங்கையில் தமிழர்களின் அரசாங்கமொன்றை நிறுவுவதே. அத்தகைய ஒரு கட்சியை அரசாங்கத்தில் சேர்த்து கொண்டதிலிருந்து நிருபணமாவது இலங்கையில் தமிழரசு நிறுவப்படும் கொள்கைக்கு யு. என். பி. இணங்கியுள்ளது என்பதே' என்று ஜனதின (15-7-66) தலையங்கம் திட்டியுள்ளது.

'கடந்த தமிழரசு மாநாட்டின் முக்கிய திர்மானமும் தமிழரசு நிறுவப்படவேண்டுமென்பதே. இந்த மாநாட்டில் பங்குபற்றியதின் மூலம் பிரதம மந்திரியும் இத்திர்மானத்திற்கு தனது ஆசியை அளித்துள்ளார்.

இலங்கையில் தமிழர் அரசாங்கமொன்றினை நிறுவுவதால் தமிழர்களின் எண்ணிக்கை பெருகும் அளவுக்கு எளிதாகிவிடும். ஆகவே கள்ளக்குடியேற்றக்காரர்கள் இந்நாட்டுக்கு வருவதைத் தமிழரசுக் கட்சி எதிர்க்கவில்லை. கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காக வட, கிழக்குப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு ஒரு வேலையும் கொடுக்காமலிருப்பதற்கான காரணம் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தின்மீது கொண்டு வந்துள்ள நிர்ப்பந்தமே என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

'இக்காரணங்களை முன்னிட்டு கள்ளக்குடியேற்ற ஆபத்திலிருந்து நாட்டை விடுவிக்க அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்காதிருப்பதால், மக்களாவது அதுபற்றி கிளர்ச்சி செய்தல் வேண்டும்' என்று ஜனதின தலையங்கம் மேலும் கூறுகிறது.

## பௌத்தர்களுக்கு காணி வேண்டும்

'புனித தீகவாப்பி பௌத்த ஆலயத்தின் பெயரால், முன்னாள் அரசாங்கம் செய்திருந்த ஏற்பாடுகளின் படி சரித்திரப் புகழ் பெற்ற தீகவாப்பி புனித பிரதேசத்தின் தென் பகுதியிலுள்ள காணிகளைச் சிங்கள பௌத்தர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்யும்படி தீகவாப்பி பௌத்த சங்கச் சம்மேளனம் பிரதம மந்திரியைக் கேட்டுக் கொண்டுள்ளது. இதுபற்றி சம்மேளனம் ஒரு மகஜரையும் பிரதமருக்குச் சமர்ப்பித்திருக்கிறது'

ஜனதின (14-7-66)

## தேர்தலுக்கு ரூ. 1 கோடி

மாஜி பிரதம நீதியரசர் திருஹேமா பாசு நாயக்கா நாடு முழுவதும் அமைத்து வரும் 'விவசாயிகள் முன்னணி' எந்தச் சமயத்திலும் பொதுத் தேர்தலில் குதிப்பதற்கு தயாராக இருப்பதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டும் இயக்க மொன்றை ஆரம்பித்துள்ளது. 'விவசாயிகள் முன்னணி' என்னும் பெயரை 'அகில இலங்கை விவசாயிகள் சங்கம்' என்று மாற்றம் செய்ய எண்ணியுள்ளனர். நிதி திரட்டவும் கட்சிப் பிரசார வேலைகளுக்காகவும்கிராமப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு பௌத்தாலயத்திலும் ஒரு கிளை நிறுவமுடிவு செய்திருக்கின்றனர்'

—எத்த (19-7-66(

## தமிழரசாரின் கடும் எதிர்ப்பு

"வட, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்களில் வசிக்கும் சிங்களப் பிள்ளைகளுக்கு தங்களின் தாய் மொழியைப் படிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமிழ் படிக்க வேண்டும் - இல்லையேல் பாடசாலைக்குச் செல்லாதிருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சிங்கள ஆசிரியர்களுக்கு அங்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தான் இதற்குக் காரணம்.

"கல்வி அமைச்சர் இரியகொல்ல வட, கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்ய விரும்புகிறார். ஆனால் தமிழரசுக்கட்சியின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக அரசாங்கம் அவருக்கு இடம் கொடுக்க மறுக்கிறது.

— எத்த (19-7-66)

## அவர்கள் 8000 பேர்

"உத்தியோக மொழியில் எந்த வேலையும் செய்ய முடியாத அரசாங்க ஊழியர்கள் 8000 பேர் இருப்பதாகப் புள்ளி விவரம் திரட்டப்பட்டுள்ளது. உத்தியோகமொழியில் பணியாற்ற முடியாதவர்கள் உத்தியோக மொழியைக் கற்றுக்கொள்வதற்காக அளிக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்தாதவர்களும், உத்தியோக மொழிப் பரீட்சைகளில் தேர்ச்சி பெறுதவர்களுமாவர்.

உத்தியோக மொழியை அமுல் நடத்தும் போது ஏற்படும் சிக்கல்கள் பற்றியும் புதிய யோசனைகள் பற்றியும் தகுதியான முடிவுகளைச் செய்து நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட 5 மந்திரிகளைக் கொண்ட மந்திரிசபை உபகுழு இது வரை ஒரு கூட்டத்தைக் கூட நடத்தவில்லை"

—தவச (7-7-66)




# தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

பயங்கரமான கிருமிகள் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கியிருந்து நோய்களைத்தொற்றவைத்துப் பரப்புகின்றன.

இந்தத்தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற உங்கள் வீட்டில் நம்பிக்கை வாய்ந்த ஒரு தொற்றுநாசினி தேவை.

டெற்றேல்—உலகின் அதி நம்பிக்கை வாய்ந்த தொற்று நாசினி—உங்கள் குடும்பத்தை எப்போதும் காப்பாற்றும்.

டெற்றேல்- வெட்டுக்காயம், கிறற்புண் முதலியனவற்றைத் தொற்றுக் கிருமிகளிலிருந்து காப்பாற்றும்.

டெற்றேல் - தொண்டைப்புண்ணைத் தடுக்கவும் குணமாக்கவும் உதவும்.

டெற்றேல். மாதரின் பிரத்தியேக சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது; ஏனெனில் டெற்றேல் இதமூட்டி, சுத்தம் தருவதோடு, தொற்றுக் கிருமிகளிலிருந்தும் காப்பாற்றும்.

டெற்றேல்- கர்ப்ப காலத்திலும், பின்னரும் குழந்தையையும் தாயையும் காப்பாற்றுகிறது.

எப்போதும் வீட்டில் ஒரு போத்தல் டெற்றேல் வைத்திருங்கள்.

டெற்றேல் உபயோகிக்குமுன் எப்போதும் நீர் கலந்து கொள்ள வேண்டும்.

உலகின் அதி நம்பிக்கைவாய்ந்த தொற்று நாசினியான டெற்றேலை உலகெங்குமுள்ள டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள்.

# டெற்றேல்

# செய்தித் திரட்டா? விவரணமா?

## தமிழ் மொழி பெயர்ப்புக்கு தனிப்பகுதி வேண்டும்

## நந்ததேவா 'ஆட்சி'யில் நாம் பட்டபாடு போதும்

பொ. சங்கரப்பிள்ளை
பி. ஏ., பி. கம் (ஆனர்ஸ்) எம். எஸ்சி. (பொருளாதாரம்)
முன்னை நாள் துணை ஆணையாளர் போக்குவரத்து திணைக்களம், தொழில் நுட்பக் கல்லூரி சிறப்பு விரிவுரையாளர்.

"புலட்டின்" என்பது ஓர் ஆங்கிலச் சொல். அதற்குத் தகுந்த தமிழ்ச் சொல் யாது என்பது பற்றிய பிரச்சினை இப்பொழுது இலங்கை மத்திய வங்கியில் தோன்றியிருக்கின்றது. இதைப் பற்றி ஆராய முன் சிறந்த ஆங்கில அறிவு இல்லாது ஒருவனுல் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்க்க இயலாது என்பதைக் குறிப்பிடவேண்டும். ஏன் என்ருல் ஆங்கிலச் சொல்லின் திட்டமான ஆணிவேர்க் கருத்தை அறியாதவர் எவ்வாறு அச்சொல்லை தமிழில் மொழிபெயர்க்கலாம். அப்படிப்பட்டவரை மொழிபெயர்ப்பிற்கு பிரமாணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

அரசகரும சொற்ருெகுதியில் பக்கம் 40ல் 'புலட்டீ'னுக்கு கொடுக்கப்பட்ட தமிழ்ச்சொல் 'செய்தித் திரட்டாகும்.' இச்சொல்லையே இதுவரையும் அரசாங்க அலுவலகங்கள் வழங்கிவந்தன. இப்பொழுது அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் 'விவரணம்' எனும் சொல்லை வழங்க வேண்டுமென்று இலங்கை மத்திய வங்கி ஆளுனருக்கு அறிவித்திருக்கிருர் என அறிகிருேம். சிங்களத்தில் 'புலட்டீனுக்கு' 'விவரணய' என்று வழங்கப்படுவதினுல் தமிழிலினும் அச்சொல்லின் ஒலி அமைய 'விவரணம்' என்ற சொல்லை வழங்கவேண்டும் என இவர் கருதுகிருர் போலத் தோன்றுகிறது.

### எலிக்குகாவல் பூனையா?

இந்த ஆணையாளரின் பெயர் கலாநிதி நந்ததேவ விஷயசேகராவாகும். இவர் சிங்களத்தில் பாண்டித்தியம் உடையவராய் இருக்கலாம். ஆனுல் இவர் தமிழில் அறிவுடையவர் என்பதை யாம் இதுவரையும் கேள்விப்பட்டதில்லை. ஆதலால் தமிழ் அறிவுடைய அறிஞர்கள் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின்பு வகுத்த 'செய்தித் திரட்டு' என்ற சொல்லைத் தள்ளிவிட்டு இவர் எவ்வாறுபெரும் புதிராக விளங்கும் இப்புதிய சொல்லை புகுத்தியுள்ளார். அவருக்கு ஆலோசனை கூறிய தமிழ் அறிஞர் யாரோ? அவரின் தகுதிதான் என்னவோ? அவருக்கு போதிய ஆங்கில அறிவு உண்டா என்று கேட்கிருேம். மேலும் தமிழ் மொழி வளர்ச்சியை ஒரு சிங்கள ஆணையாளரின் கையில் ஒப்படைப்பதினுல் ஏற்படும் தீமைகளை இவ் எடுத்துக்காட்டு நன்ருக விளக்கும். எலியைப் பூனையிடம் பாதுகாப்பிற்கு ஒப்படைப்பதை இது ஒக்கும்.

இது எவ்வாறு ஆயினும் எம்மைப் பொறுத்த மட்டில் தகுந்த சொல்லை தெரிவு செய்வதே எமது முக்கிய நோக்கமாகும். அது எச்சொல்லாக விருந்தாலும் பரவாயில்லை. குறிப்பாக தகுந்த சொல் தமிழில் இல்லாதபோது பிறமொழியில் இருந்து கடன் பெறுவதை யாம் எதிர்க்கவில்லை. ஆனுல் நிச்சயமாக தமிழில் தகுந்த சொல் இருக்கும்போது, பிழையான உரிய கருத்தைக் குறிக்காத ஒரு பிறமொழிச் சொல்லை கடன் பெறவேண்டுமென்று எம்மை வற்புறுத்த கலாநிதி விஜயசேகராவிற்கு அவர் பல கலாநிதிப்பட்டங்கள் பெற்றிருப்பினும் என்ன உரிமை உண்டு?

### 'புலட்டினி'ன் பொருள் என்ன?

ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியின் படி 'Bulletin' எனும் சொல்லின் கருத்துக்கள் பின்வருபவையாகும்.
1. An official Report of public news or of a health progress; News in Brief
'விவரணம்' எனும் சொல்லின் ஆங்கில மொழிபெயர்ப்பு (description) விபரித்தல் ஆகும். 'புலட்டீன்' என்ற சொல்லின் கருத்தில் 'Description' என்ற சொல்லை எங்காவது காணமுடியுமா? 'புலட்டீன்' என்பது 'Official Report' அன்றி 'Description' அன்று. ஆதலால் புலட்டீனை 'Description' என்று மொழி பெயர்ப்பது சிரிப்பிற்கு இடமாகும். மொழி பெயர்ப்பவருக்கு ஆங்கிலம் தெரியாதென்பதை இது காட்டும். மொழி பெயர்ப்பவர் இதற்கு 'சித்தாந்த' நூல்களைத் தேட வேண்டியதில்லை. 'ஆக்ஸ்போட்' ஆங்கில அகராதியைப் 'Oxford' பார்த்தால் மட்டுமே போதும். சிங்களத்தில் கலாநிதி நந்ததேவா விஜயசேகரா சரியாகவோ பிழையாகவோ எச்சொல்லை வழங்கினுலும் அதைப் பற்றி எமக்குக் கவலையில்லை. ஆனுல் அவரின் அறியாமையையும் பிழைகளையும் தமிழில்மேல்சுமத்த அவர்எத்தனித்தால் அதை யாம் வன்மையாகக்கண்டிக்கவேண்டும்.

### தனிப்பகுதி வேண்டும்

ஆதலால் 'Central Bank Monthly Bulletin' என்பதற்கு 'மத்திய வங்கி திங்கள் செய்தித்திரட்டு' என்பதே ஏற்ற சொல்லாகும். மேலும் ஒன்று கூற விரும்புகிறேன். கலாநிதி நந்ததேவா விஜயசேகராவின் ஆட்சியின் கீழ் தமிழ் மொழி பட்டபாடு போதும். இனிமேலாவது எமக்கு மீட்சியில்லையா? தமிழ்மொழி சிறப்புச்சட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஒருதனித்திணைக்களம் தகுதிவாய்ந்த தமிழ் ஆணையாளரின் கீழ் இயங்கவேண்டிய அவசியத்தை கலாநிதி விஜயசேகராவின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன.

இதுவரையும் தமிழ் வளர்த்த பெருமகன் கலாநிதி நந்ததேவா விஜயசேகராவிற்கு எமது நன்றி. இனிமேலாவது இவ்விடயத்தில் அவரைத் தலையிடாது இருக்க வேண்டுகிறேம். கலாநிதி நந்ததேவா விஜயசேகராவின் அதிகாரபூர்வமான செயல்களுக்கு ஆதரவு அளித்த 'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு' எம் நன்றி. வயிற்றுப்பிழைப்பிற்கு வேறுபலவழிகள் உண்டென்பதை அவர்களுக்குநினைவுறுத்தி இக்கட்டுரையைமுடிக்கிறேன்.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிட மிருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-11

* ஆட்குறைப்பு * நாணய மதிப்பு மாற்றம்

# காங்கிரஸ் நிர்வாகத்திற்கு சவால்

இந்திய அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொன்றும் காங்கிரஸ் நிர்வாகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவனவாகவே அமைகின்றன. அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பலமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலையை இம்மாற்றங்கள் ஏற்படுத்தி வருகின்றன.

நாணய மதிப்பின் மாற்றம் அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பெரிய தொரு சவாலாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் அன்று கூறியது இன்று ஓரளவு உண்மையாகி விட்டது. நாணய மதிப்பின் மாற்றத்தினுல் உள்நாட்டு உற்பத்திப் பொட்களின் விலைகள்கூட பெருமளவு உயர்ந்துவிட்டன. ஒட்டல் முதலாளிகள் இட்லி, தோசை போன்றவற்றின் விலைகளைக் கூட உயர்த்தி விட்டார்கள். எழுபத்தைந்து பைசாவாக இருந்த ஒரு நேர சாப்பாட்டின் இன்றைய விலை 1.10 பைசாவாக உயர்ந்திருக்கிறது. எட்டுப் பைசாவிற்றஇன்று இட்லி 10பைசா. 20பைசா விற்றசாதாரண தோசை இன்று 30 பைசாவாக உயர்ந்திருக்கிறது. இத்தகைய விலை உயர்வுகள் சாதாரண பொது மக்களை நேரடியாகத் தாக்குகின்றன. இதனுல் மக்கள் காங்கிரஸ் ஆட்சி மீது வெறுப்புக் கொண்டிருக்கிருர்கள்.

பொருட்களின் விலை உயர்வினுல் பொதுமக்கள் காங்கிரஸ் ஆட்சி மீது கொண்டிருக்கும் வெறுப்பை அடுத்த பொதுத் தேர்தலில் நிச்சயம் செயலுருவில் காட்டியே தீருவார்கள். இந்திய

இந்திய தேர்தற் களம்
நமது நிருபர்

நிதி அமைச்சர் சனம் சுசீந்திரா சௌத்திரி நாணய மாற்றம் பற்றி வானெலியில் உரை நிகழ்த்துகையில், இந்த நாணய மதிப்பு வீழ்ச்சி வெளிநாட்டுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், இதனுல் உள்நாட்டில் எத்தகைய மாற்றமும் ஏற்படமாட்டாது என்றும், இம்மாற்றம் பொருட்களின் விலைகளைக் கூட்டவோ மக்களின் வாழ்க்கைச் செலவை உயர்த்தவோ மாட்டாது என்றும் அன்றுகூறியது இன்றுபழங்கதையாக-பொய்யாக மாறிவிட்டது. நிதி அமைச்சரின் வாக்குறுதி என்னவாயிற்று என்றே இன்று எதிர்க்கட்சியினர் ஒவ்வொரு தேர்தற் பிரச்சாரக் கூட்டங்களிலும் கேட்கிருர்கள்.

### ஆட்குறைப்பு

மாநிலங்களின் செலவை பதினைந்துவிகிதம் குறைக்க வேண்டுமென்ற மத்திய அரசின் புதிய கொள்கையினுல் ஒவ்வொரு மாநிலங்களிலும் ஆட்குறைப்புப் படலம் ஆரம்பமாகியிருக்கிறது. இதுவும் காங்கிரஸ் நிர்வாகத்திற்கு பெரிய தலையிடியாக இருக்கிறது.

இக்காரணங்களினுல் பொதுமக்கள் காங்கிரஸ் நிர்வாகத்தின் மீதுகொண்டிருக்கும் வெறுப்பை நல்ல முறையில் பயன்படுத்த எதிர்க்கட்சிகள் முயன்று வருகின்றன. ஆனுல் எதிர்கட்சிகளின் கூட்டு முயற்சியால் காங்கிரஸ் கட்சியை அதிகார பீடத்திலிருந்து அகற்றி விடமுடியாது. ஒரு சில மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கலாம். ஆனுல் மத்திய அரசில் காங்கிரஸ் கட்சியே மீண்டும் அதிகாரத்தைப் பொறுப்பேற்கும். இதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை.

### கம்யூனிஸ்டுகள்

மத்திய அரசில் காங்கிரஸ் நிர்வாகம் தொடர்ந்திருப்பதற்கு முக்கிய காரணம் அகில இந்திய ரீதியிலான பெரிய எதிர்க்கட்சி இல்லாததேயாகும். கம்யூனிஸ்டுக் கட்சி அகில இந்

(12-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட சபைகள் மூலம் நமது கலாசாரத்தைப் பாதுகாப்போம்

## 'வீ' அறிமுக விழாவில் அமைச்சர் திருச்செல்வம் விளக்கம்

"மாவட்ட சபைகள் விரைவில் நிறுவப்படும். இச்சபைகள் நமது மொழி பண்பாடு, கலாசாரங்களைப் பேணிபாதுகாத்து வளர்க்கக்கூடிய அதிகாரங்களைப் பெற்றனவாகவே அமையும். மாவட்ட சபைகள் நிறுவபபட்ட பின்னர் நமது தமிழ் அறிஞர்களினதும் எழுத்தாளர்களினது பொறுப்புக்கள் அதிகமாகும். நமது இலக்கியங்களைத் தனித்தன்மையுடன் உருவாக்கிப் பாதுகாப்பதுடன் புதிய சொற்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது விஞ்ஞான உலகம். விஞ்ஞானக் கருத்துக்களைத்தமிழ் மொழி மூலம் நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். இதற்கு சொல்லாக்கம் அவசியம். புதிய சொற்களை நாம் உருவாக்கும் பொழுது அச்சொற்களை ஏனைய நாட்டுத் தமிழர்களும் ஏற்றுக் கொள்வார்களா என்பதை நாம் கவனிக்க வேண்டும். இதில் நாம் தமிழ் நாட்டையும் நமது தனித்தன்மைக்கு பங்கம் ஏற்படாத முறையில் பின்பற்றலாம்' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்கள் அண்மையில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற திரு. எஸ். பொன்னுத்துரை அவர்களின் 'வீ' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் நூல் விற்பனையைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினர்.

விழாவிற்கு பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் தலைமை தாங்கினர்கள். தலைவர் தனது தலைமையுரையில் கூறியதாவது:—

'பல நூல் அறிமுக விழாக்களில் பங்கு பற்றி இருக்கிறேன். குறிப்பாக இந்தியாவில் பல நூல்அறிமுக விழாக்களுக்கு நாடாளும் அமைச்சரவை உறுப்பினர்கள் சமூகம் கொடுத்து எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவார்கள். இந்த நிலை ஈழத்து எழுத்தாளர்களுக்கு எப்பொழுது ஏற்படும் என்று அவாவுற்றவனாய் இருந்த எனக்கு; இன்று எனது நீண்ட நாளைய அவா நிறைவாவது கண்டு உளப்பூரிப்படைகிறேன். ஈழத்தில் கடந்த பத்தாண்டுகளாக தமிழர் சமுதாயம் தனது மொழி மாற்று மொழிகளால் ஆக்கிரமிக்கப்படாது தனித்தன்மையுடன் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற சுதந்திரக் கோட்பாட்டுடன் போராடிக்கொண்டிருந்ததினால் எம்மவர் அமைச்சரவையில் இடம்பெற இயலாதிருந்தது.

'இன்று நாட்டில் ஓர் சுமுக நிலை ஏற்பட்டிருப்பதனல், நாமும் ஆளும் பொறுப்பில் பங்கு கொண்டுள்ளோம். இந்த வேளையில் சில எழுத்தாளர்கள் ஒன்று கூடி நண்பர் ஒருவரின் நூல் ஒன்றினை அறிமுகப்படுத்தி விழாக் கொண்டாடுகையில் எமது அமைச்சர் அவர்கள் இவ் விழாவில் பங்கு பற்றி எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க முன் வந்தது, எழுத்தாளர்களாகிய எமக்குப் பெரும் ஆனந்தத்தைத் தருகிறது. இந்தச் சிறு விழாவில் பங்கு பற்றியதே அமைச்சர் அவர்களின் மொழி, இனப்பற்று எத்தகையது என்பதை எடுத்துக் காட்ட நல்ல சான்ருகும்.

### நல்ல தமிழில் எழுத வேண்டும்

'நாம் எழுதும் பொழுது நல்ல தமிழில் எழுத வேண்டும். மற்ற மொழிகளுடன் கலந்து எழுதி எமது மொழியின் தனித் தன்மையை இழக்கக் கூடாது. எழுத்துக்கள் மொழியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்க ஒரு பொழுதும் இடமளிக்கக் கூடாது. 'இலங்கை' என்றும் 'ஈழம்' என்றும் பண்டு தொட்டு வழங்கி வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக இன்று ஒரு சிலர் 'ஸ்ரீ லங்கா' என எழுத முற்பட்டிருக்கிருர்கள். இச் சொற்கள் மாற்று மொழிப் பிணைப்பால் ஏற்பட்ட சொற்கள். இவை தவிர்க்கப்பட வேண்டும். நான் ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம் என்று இருக்கும் பெயரை இலங்கை சாகித்திய மண்டலம்என்றே



எழுதியும், வழங்கியும் வருகிறேன். இப்படியான முயற்சிகளை மற்ற எழுத்தாளர்களும் அறிஞர்களும் பின்பற்றுவார்களேயானல் எமது மொழி ஒருபொழுதும் மாற்றுமொழிகளால் ஆக்கிரமிக்கப்படாது பாதுகாத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

'தமிழின் பழமை பேணி, மேல் நாட்டு முன்னேற்றக் கருத்துக்களைச் சேர்த்து, புதிய முறையில் மரபு பேணி நற்போக்கு இலக்கியம் படைப்பதில் கைதேர்ந்தவர் திரு. பொன்னுத்துரை அவர்கள். பல சிறந்த உத்திகளைக் கையாண்டு கதைகள் எழுதுவதில் ஈழத்தில் தலை சிறந்த எழுத்தாளராக விளங்கும் பொன்னுத்துரை அவர்களின் நூல் அறிமுக விழாவில் பங்கு பற்றி தலைமை வகிப்பது நான் செய்த பெரும் பாக்கியமே. பல கொள்கைகளை உடையவர்கள், பல கட்சிகளைச் சார்ந்தவர்கள் இங்கு விழாவில் பங்குபற்ற வந்திருக்கிருர்கள். அவர்கள் அனைவரதும் நோக்கம் ஒன்றே. ஆனல் அதை அணுகும் வழியே வேறுபட்டிருக்கிறது. சனநாயக முறை பேணி நடைபெறும் முதலாவது நூல் அறிமுக விழா இதுவே யாகும்.'

திரு. மகாகவி அவர்களினது வாழ்த்துப் பாவை அடுத்து திரு. எப். எக்ஸ். சி. நடராசா பேசுகையில் கூறியதாவது!

'நான் தமிழ் மொழி தனித்தன்மையுடன் வாழ வேண்டும் என்று விரும்புபவன். சமஸ்கிருதச் சொற்கள் பாவிப்பதை அறவே வெறுப்பவன். ஆனல் இந்த 'வீ' தொகுதியில் உள்ள கதைகளில் திரு. பொன்னுத்துரை அவர்கள் 'ஷ', 'ஸ', போன்றவற்றை சரளமாகப் பாவித்துள்ளார். இவற்றை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இவற்றை விலக்கி எழுத அவர் முயற்சிக்க வேண்டும். நான் இப்படியாகத் தமிழ் வளர்க்க என்னைப் பலர் தமிழ்த்துரோகி என்று கூறுகிருர்கள்.'

### வேற்றுமை ஏன்?

நூலை அறிமுகப்படுத்திஜனுப் செய்யது அகமது அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

'மொழியால் ஒன்றுபட்டு வாழும் தமிழ் பேசும் மக்களை மதத்தின் பெயரால் பிரித்துக் கூறுவது பெருந் தவருகும். இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் தமிழின் வளர்ச்சிக்காக உழைத்து வருகிருர்கள். மத வேறுபாடுகளை மறந்து இது எமது மொழி இதைப் பேணிக் காக்கவேண்டியதும், வளர்க்க வேண்டியதும் எமது கடமை என உணர்ந்து உழைத்து வருகிருேம். இச் சந்தர்ப்பத்தில் சிலர் இஸ்லாமியர்களைச் சோனகர் என்றும் முஸ்லிம்கள் என்றும் மதத்தின் பெயரால் பிரித்து அழைப்பது தவறு. இன்று புதிய தமிழ் இலக்கிய வளர்ச்சியின் வேகத்தை மலையகத்திலும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடையேயும் தான் பார்க்க முடிகிறது.'

### சாதாரண தமிழில் எழுதுக

நூல் விற்பனையை ஆரம்பித்து வைத்து உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது.

'வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் உற்சாகத்தை வளர்க்க வேண்டுமென்ற அவாவினலே அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து சொற்ப நேரத்திற்கு லீவு எடுத்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறேன். நான் இங்கு பங்குபற்றியது மிகவும் பிரயோசனமானது என்பதை இப்போ நன்ருக உணர்கிறேன். திரு. பொன்னுத்துரை அவர்களின் திறமையைப்பற்றி பலரும் கூறக் கேட்டேன். இவர் போன்ற பல எழுத்தாளர்கள் எம்மத்தியில் தோன்ற வேண்டும்.

'சேர நாட்டில் 800 வருடங்களுக்கு முன் தமிழ் மொழி வழக்கில் இருந்து வந்தது. மாற்று மொழிகளின் கலப்பால் இன்று, அங்கு மலையாளம் பழக்க மொழியாகிவிட்டது' கன்னடத்திலும் முன் தமிழ் மொழியே பிரதேச மொழியாக இருந்து வந்தது. இன்று இவை எல்லாம் மாறுபட்டுவிட்டன. எமது எழுத்தாளர்கள் எப்பொழுதும் எமது இன, மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். பாரதியார், சிறந்த கவிஞனக, சிறு கதை எழுத்தாளனக, கட்டுரையாசிரியனக விளங்கிய. அதே வேளையில் நாட்டின் சுதந்திரத்துக்காக போராடும் சுதந்திர வீரர்களில் தலைசிறந்தவராகவும் வாழ்ந்தார். அதே போன்று எமது மொழியை பாதுகாப்பதும், வளர்ப்பதும் வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டிகளாய் இருப்பதும் எழுத்தாளர்களின் பணியாக இருக்க வேண்டும். எமது எழுத்தாளர்கள் எப்பொழுதும் சாதாரண தமிழில் எழுத வேண்டும். பண்டிதத் தமிழ் பாமரத் தமிழ் என்று வித்தியாசம் காட்டக் கூடாது. உதாரணத்துக்கு இந்தியாவில் தி. மு. க. தலைவர்கள் பாவிக்கும் தமிழைப் பாருங்கள். எல்லோரும் விரும்பிப் படிக்கும் முறையில் அவர்கள் தமிழை எழுதுகிருர்கள். எழுத்தாளர்கள் எப்பொழுதும் எமது பண்டைய கலாசாரம் பேணப் படுவதைக் குறிக் கோளாகக் கொள்ள வேண்டும்.

### சொல்லாக்கம்

'இப்பொழுது நாம் வாழ்வது விஞ்ஞான உலகம். அறிவியற் சொற்களை நாம் தமிழில் உருவாக்க வேண்டியது அவசியம். தமிழில் அறிவியற் சொற்களைப் புதிதாக உருவாக்கும் பொழுது அச்சொற்களைப் ஏனைய நாட்டுத் தமிழர்களும் ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் பார்க்க வேண்டும். இதில் நாம் தென்னுட்டைப் பின்பற்றலாம். அதற்காக அவர்களையே முழுவதற்கும் நாம் நம்பியிருக்கக் கூடாது. நமது தனித் தன்மை பாதிக்கப் படாத முறையில் தென்னுட்டுடன் தொடர்பு கொள்வதில் தவறில்லை.

'ஈழத்தில் 25 லட்சம் மக்களாக வாழும் நாம் இன்னும் சில காலத்துள் 20 லட்சமாகக் குறைந்து விடுவோம். ஆதலினல் மற்றும் நாடுகளுடன் நாம் கலாசாரத் துறையில் தொடர்பை வளர்த்துக் கொள்வது சிறந்தது. நாம் மாவட்ட சபைகளை நிறுவ முயற்சி எடுத்து வருகிருேம். அப்பொழுது அதன் அதிகாரங்களுக்குள் மொழி, கலாசாரம் பேணப் படுவது பிரதானமானதாக இருக்கும். திரு. எஸ் பொன்னுத்துரை போன்ற சிறந்த எழுத்தாளர்கள் கௌரவப் படுத்தப் படுவார்கள்.

### முற்போக்கு நோக்கு

அடுத்து முற்போக்கு எழுத்தாளரின் முன்னேடியாக திகழும் திரு. கா சிவத்தம்பி அவர்கள் ஆய்வுரை நிகழ்த்துகையில் கூறியதாவது!

'திரு. பொன்னுத்துரை அவர்களின் நூலை நான் ஒரு முற்போக்கு எழுத்தாளர் அணியைச் சேர்ந்த விமர்சகன் என்ற கோதாவில் விமர்சிக்க முற்படுகிறேன். பொன்னுத்துரை அவர்களின் சிறந்த கதைகள் என்று பலராலும் பாராட்டப்பட்ட கதைகள் சில இத்தொகுதியில் இடம் பெருமைக்கு காரணம் யாது? முன்னர் வெளிவந்த இவரது கதைகளுதம் இப்போ இதில் இடம் பெறும் கதைகளுக்கும் இடையில் பெரும் இடைவெளி ஒன்று தோன்றுகிறது' இந்த இடைவெளி எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதை நூலாசிரியர் கூறத்தவறி விட்டார். கதைகளின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இடம் பெற்று இருக்கும் படங்கள் அவர் நினைத்த அளவுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. இத்தொகுதியிலே இடம் பெற்ற கதைகளில் 'டொமினிக்சலூன்' ('அது ஸ்பூட்னிக்சலூன்' என நூலாசிரியர் திருத்திக் கூறினர்) கதை நடைபெறும் இடமாக கொண்டிருக்கும் கதைத்தொனிப் பொருளில் தவறு இருக்கின்றது. இது ஒரு தனிக் குறிக்கோளைக் கொண்டு எழுதப்பட்டதாகயாக இருத்தல் வேண்டும். ஆதலினல்தான் இதில் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதில் அவர் கையாண்டு இருக்கும் பிரதேச மொழிகள், பாராட்டப்படவேண்டியவை. ஆனல் இதிலும் திறமான கதைகளை என்னல் படைக்க முடியுமென்று நான்கூற முன்வரவில்லை, நான் சிறுகதைஎழுத்தாளனல்லன் ஆற்றல் இலக்கியம் படைப்பதில் அருகதை குறைந்தவன். ஆனலும் அவற்றை ஆராய்ந்து ஆய்வுரைகள் நிகழ்த்துவதில் பரிட்சயம் உடையவன் என்ற காரணத்தினல் ஆய்வுரை நிகழ்த்த முன் வந்தேன். என்ருலும் இப்பொழுது எழுப்பப்பட்ட வினக்களுக்கு ஆசிரியர் அவர்கள் பதில் தருவார் என்ற நோக்கத்துடன் அமருகிறேன்.'

### "வீ" விளக்கம்

கடைசியாக நூல் ஆசிரியர் திரு. எஸ். பொன்னுத்துரை அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

(11-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ. சீ. ஈ.
(சா. த.)
பயிற்சிக் கோவைகள்

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| பூமி சாஸ்திரம் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடலலவியல் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| 101 கட்டுரைகள் | 7-50 |
| பொது அறிவும் பொது விவேகமும் | 5-00 |

சர்வகலாசாலை போதனு கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு-10.

சுதந்திரன்
SUTANTIRAN

1966 யூலை மாதம் 24-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1188

# ஒரு வேண்டுகோள்!

நாட்டிலே பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்திய வங்கி வேலை நிறுத்தம் முடிவடைந்துவிட்டது. அது வங்கி ஊழியர்களுக்கு வெற்றியோ தோல்வியோ, நாட்டின் நலனையும் மக்களின் வசதியையும் கருதி அவர்கள் வேலைக்குத் திரும்பியதில் அனைவருக்கும் மகிழ்ச்சியே. அவர்களுக்கு எமது நன்றி!

தேசிய ஜவுளிக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும், தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தமும் இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றன. தோட்டத் தொழிலாளி நாட்டின் முதுகெலும்பு. அவன் வேலை நிறுத்தத்தில் இறங்கிவிட்டால் தேசியப் பொருளாதாரம் பாதிக்கும். தற்போதைய தோட்ட வேலைநிறுத்தத்தில் வாரம் 40 இலட்சம் ரூபாய் வீதம் வருமானம் குறைவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய ஒரு வேலை நிறுத்தம் காலவரையறையின்றி நீடிப்பதால் நாட்டுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் இவ் வேலை நிறுத்தத்தில் இதுவரை தலையிடவில்லை. தலையிடும் நோக்கம் கிடையாதென்பதைத் தொழில் அமைச்சர் விளக்கியுள்ளார். அதற்கு அவர் கூறும் காரணம் இஃது 'அரசியல் வேலை நிறுத்தம்' என்பதே.

இதனை அரசியல் வேலை நிறுத்தம் என்று கூறுவதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

தற்போதைய வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ள நான்கு தொழிற் சங்கங்களின் மொத்த உறுப்பினர் தொகை சுமார் 430,000 ஆகும். ஆகவே குறைந்த பட்சம் 400,000 பேர் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று தயக்கமின்றிக் கூறலாம். அவர்களில் சுமார் 25000 பேர் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எஞ்சிய 375,000 பேர்களும் தமிழர்கள்—மலை நாட்டுத் தமிழர்கள்.

அரசியல் வேலை நிறுத்தம் என்பது அரசாங்கத்துக்கு விரோதமாக நடத்தப்படும்வேலைநிறுத்தமாகும். தற்போதைய வேலை நிறுத்தம் அமைச்சர் கூறுவதைப் போல 'அரசியல் வேலை நிறுத்தமாக' இருந்தால், தமிழர்கள் 375,000 பேர் தேசிய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். என்றல்லவா முடிவு செய்ய வேண்டியிருக்கிறது?

தேசிய அரசாங்கம் சிறுபான்மையோரின்பால் அனுதாபம் கொண்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை தேசிய அரசாங்கம் படிப்படியாக வழங்கி வருவதால் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் அரசாங்கத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றனர். அந்த நிலையில் 375,000 தமிழர்கள் அரசாங்கத்தை எதிர்த்து அரசியல் வேலை நிறுத்தம் செய்கிறார்களென்று கூறுதல் அபத்தமாகும்.

தமிழர்கள் நிச்சயம் இந்த அரசாங்கத்தை எதிர்க்கமாட்டார்கள். அவர்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். ஆகவே அவர்கள் நடத்தும் வேலை நிறுத்தம் அரசியல் வேலை நிறுத்தமல்ல.

வேலை நிறுத்தத்தை ஆரம்பித்த ஐ. தொ. காங்கிரஸின் தலைவர் ஜனுப் அஸீஸ் கடந்த பொதுத் தேர்தலில் அரசாங்கக் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்தாராம். தேர்தலில் எதிர்த்ததற்காக அவர் நடத்தும் வேலை நிறுத்தம் அரசியல் வேலை நிறுத்தமாகிவிடுமா? தேர்தலில் எதிர்த்ததற்காக அவர் நடத்தும் வேலை நிறுத்தங்களில் அரசாங்கம் தலையிடக் கூடாதா? அப்படியானால் எதிர்க்கட்சியினர் எந்த வேலை நிறுத்தத்தை நடத்தினாலும் அது அரசியல் வேலை நிறுத்தமா? அரசாங்க ஆதரவாளர் நடத்தும் வேலை நிறுத்தங்கள் மட்டுந்தானா பொருளாதார வேலை நிறுத்தம்? அரசாங்க ஆதரவாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தங்களில் மட்டுந்தானா அரசாங்கம் தலையிடும்? இதுதான் தொழில் அமைச்சரின் 'தொழிலாளர்' கொள்கையா' என்று கேட்க விரும்புகின்றோம். இத்தகைய ஒரு கொள்கை ஜனநாயகக் கோட்பாடுகளுடன் இணைந்து செல்லாது.

ஒரு தொழிற் தகராறைத் தீர்க்க முற்படும் போது அவர்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களா, இல்லையா என்பதைப் பார்ப்பது தொழிற் சங்க இயக்கத்தை வளர்ப்பதற்கு உதவிபுரியாது. நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தை வளர்ப்பது ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமையாகும்.

தோட்ட வேலை நிறுத்தம் ஒரு கேலிக் கூத்து என்று திரு. தொண்டமான் கூறினாராம். ஐ. தொ. கா.—இ. தொ. கா. ஆகிய இரு தொழிற் சங்கங்களிடையே கடுமையான தலைமைப் போட்டி உண்டென்பதும் மலை நாட்டுத் தமிழர்களுக்குத் தெரியும். அந்தப் போட்டியின் விளைவாக அவர் அப்படி கூறியிருக்கலாம். அவர்களின் போட்டியைப் பற்றி தொழில் அமைச்சு கவலைப்படக்கூடாது. அதனை அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும். ஒரு தொழிற் தகராறு ஏற்பட்டால், உடனே தலையிட்டு அதனைச் சமரசமாகத் தீர்த்து வைக்க வேண்டியது தொழில் அமைச்சின் கடமை. முக்கியமான ஒரு தொழில் தகராறில் தலையிட முடியாவிட்டால், 'தொழில் பகுதி' இருப்பதால் மக்களுக்கு என்ன பயன்?

இதர தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படி ரூ 17 / 50 தங்களுக்கும் கொடுக்கும்படி கேட்கிறார்கள் தோட்ட தமிழர்கள். இது பற்றி பேச்சு வார்த்தை நடத்தி அவசியமானல் அத்தொகையைச் சிறிது குறைத்தாவது ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்து தகராறைத் தீர்த்து வைக்க வேண்டாமா? பேச்சு வார்த்தைகள் மூலம் உலகம் யுத்தம் ஏற்படுவதையே தவிர்க்கும் போது, ஒரு வேலை நிறுத்தத்தை தவிர்க்க முடியாதா? எதற்கும் பேச்சு வார்த்தைகளை நடத்திப் பார்க்க வேண்டும். பேசுவதால் யாருக்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது?

இ. தொ. கா. மூன்றாண்டுகளாக ரூபா 1/- சம்பள உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதுவும் எட்டாக் கனியாகி விட்டதாகவே தெரிகிறது. பஞ்சப்படியும் இல்லை — சம்பள உயர்வும் இல்லை என்ற நிலைதான் இன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த ரூபா 1/- கொடுத்தால் ரூபா 17/50 கொடுக்கத் தேவையில்லை.

ஜனுப் அசீசும், ஐ. தொ. கா.வும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள். எனவே அவர்களின் 17/50 கோரிக்கையை வழங்க முடியாது'' என்று கூறுகிறவர்கள், திரு. தொண்டமானும், இ. தொ. கா. வும் அரசாங்க ஆதரவாளர்களாயிருப்பதால் அவர்களின் ரூபா 1/- கோரிக்கையையாவது வழங்க ஏற்பாடு செய்யலாமல்லவா? அது கிடைத்துவிட்டால், தொழிலாளர் 17/50 கோரிக்கையைக் கைவிட்டு உடனே வேலைக்குத் திரும்பிவிடுவார்கள் என்பது திண்ணம். அதை ஏன் செய்யவில்லை?

அதுவும் இல்லை, இதுவும் இல்லை, ஒரு மாமாங்கமாக சம்பள உயர்வும் இல்லை, உழைத்து உழைத்து உயிரை விடுங்கள்' என்று தோட்டத் தமிழர்களைப் பார்த்து கூறுமற் கூறுவது எப்படி நியாயமாகும்?

பண்டாரநாயக்கா ஆட்சி பஞ்சப்படியைக் கொடுத்திருக்கலாமே என்று வாதிப்பது சரியன்று, பஞ்சப்படியைத் தாங்கள் கொடுத்துவிட்டு, ''அவர்கள் கொடுக்காததை நாங்கள் கொடுத்தோம்'' என்று கூறுவதுதான், சரியாகும்.

அரசாங்க ஆதரவாளர்களான சுமார் 375000 தமிழர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாலும், வேலை நிறுத்தம் ஆரம்பமாகி 40 நாட்களாகிவிட்டதாலும், தொழில் அமைச்சர் வங்கி வேலை நிறுத்தத்தில் தலையிட்டதைப்போல இதிலும் உடனடியாகத் தலையிட்டு, முதலாளி — தொழிலாளி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்து, நாட்டிலே தொழில் அமைதியை நிலைநிறுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# தமிழரசார் பணியில் பொ. கட்சி பெருமை

'நான் பெற்ற பிள்ளை நல்ல பிள்ளையானால் ஊரார் எல்லாம் உறவு கொண்டாடுவார்கள்' என்பது நாடோடி வழக்கு. இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினை முடிவும் இப்படியே அமைந்து விட்டது.

இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினை கடந்த ஆண்டு (1965) மே திங்களில் ஆரம்பமாகியது. சரியாக பதினுலு திங்கள் காலம் இலங்கை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் இப் பிரச்சினையையிட்டுப் போராடியிருக்கிறது. அவர்களின் போராட்டத்திற்கு தமிழரசுக் கட்சியினரும் தமது ஆதரவைக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்று போராட்டம் வெற்றி பெற்று விட்டது. 'சென்றல் பாங்க் ஒப் சிலோன்' என்பதற்கு 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என்றும் இதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் பிரதமர் மத்திய வங்கி நாணயசபைக்கும் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கும் எழுதியுள்ளார். இப்பொழுது இந்த வெற்றியில் பங்குகொள்ள வேறு சிலரும் வெட்கமின்றி முன் வந்திருக்கிறார்கள்.

## மையமும் மத்தியும்

1965ம் ஆண்டு மேதிங்கள் ஆரம்பமான இப் பெயர்ப் பிரச்சினையையிட்டு 1966 ம் ஆண்டு மே திங்கள் 21ம் திகதியன்று சரியாக ஒரு வருடத்திற்குப் பின்னர் பொ. கட்சியினரும் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தனர். அவர்கள் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் 'சென்றல் பாங்க் ஒப் சிலோன்' என்பதற்கு 'இலங்கைமைய வங்கி' என்று பெயரிட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால் பிரதமர் பொ. கட்சியினரின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். மத்திய வங்கித் தமிழ் ஊழியர்களும் தமிழரசுத் தந்தையும் கேட்டிருந்த வண்ணம் 'இலங்கை மத்திய வங்கி' என்ற பெயரையே அவர் ஏற்றுள்ளார்.

இப்பொழுது பொ. கட்சியினர் தமது கோரிக்கை என்ன என்பதையே மறந்து 'இலங்கை மத்திய வங்கி' யென பெயரிட பிரதமர் சம்மதம் கொடுத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும், த. கா. கோரிக்கையைப் பிரதமர் ஏற்றுக்கொண்டதற்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இது மாற்றார் பணியில் பெருமை காணும் பேடித்தனம் என்பதை மீண்டும் பொ. கட்சிப் பிரமுகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். பொ. கட்சியின் கோரிக்கையைப் பிரதமர் ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களின் தலைவருக்கு அல்லவா கடிதம் எழுதியிருக்க வேண்டும். இந்தச் சிறு உண்மையைக் கூட அவர்கள் தெரிந்து கொள்ளாது தமிழரசார் பெற்ற பிள்ளை நல்ல பிள்ளையென்பதற்காக அவர்களும் உறவு கொண்டாட முன் வந்திருக்கிறார்கள்.

சுதந்திரன்
அரசியல் நிருபர்

## தமிழ் ஊழியர் பிரச்சினை

மத்திய வங்கிப் பிரச்சினையில் மட்டுமல்ல அரசாங்க ஊழியர் பிரச்சினைகளிலும் இதே நிலையைத்தான் பொ. கட்சித் தலைவர் பின்பற்ற முற்பட்டிருக்கிறார். தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினைகளையிட்டு 1960 ம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் எடுத்து வருவது பலரும் அறிந்ததே. அன்று புகழ் பெற்ற கோடீசுவரன் வழக்கை தமிழரசார் முன்நின்று நடாத்தினார்கள். பொ. கட்சியின் பிரபல வழக்கறிஞர்கள், 'கெட்டிக்காறச் சட்ட வாதிகள்" எல்லாரும் தமிழ் மக்களை மறந்திருந்த நேரத்தில் இன்றைய உள்ளூராட்சி அமைச்சர் கோடீசுவரன் வழக்கில் ஆஜராகிவெற்றி பெற்றார். அத்துடன் தமிழ் ஊழியர்களின் பிரச்சினைகளையிட்டு சில நேரடி நடவடிக்கைகளையே தமிழரசார் எடுத்திருந்தார்கள்.

தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதுபற்றியபேச்சு வார்த்தையின்போது தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையையும் ஒரு முக்கிய விடயமாக ஆராயப்பட்டது. பொ. கட்சியினரோ எத்தகைய நிபந்தனையுமின்றி தேசிய அரசாங்கத்திடம் வந்து சரணடைந்தவர்கள். இப்பொழுது தமிழரசாரின் முயற்சி கைகூடும் நேரத்தில் அதில் தாங்களும் பங்குகொண்டு பெருமை பெற வேண்டுமென்ற ஆவலுடன் சில கடிதங்களை நிதி அமைச்சருக்கும் பிரதமருக்கும் பொ. கட்சியினர் எழுதுகிறார்கள்.

## அமைச்சர் கொடுத்த அடி

மத்திய வங்கிப் பிரச்சினையில் எங்ஙனம் ஒரு ஆண்டு காலத்தின் பின் பொ. கட்சியினர் தலையிட்டார்களோ அப்படியே அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளும் கைகூடிவரும் நேரத்தில் கடிதம்எழுத முற்பட்டிருக்கிறார்கள். சிங்களத் தேர்ச்சி பெருத ஊழியர் பிரச்சினையையிட்டு அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் பல தடவைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்கியிருக்கிறார். இத்தனைக்கும் பின்னர் பொ. கட்சித் தலைவர் கடந்த மாதம் நிதி அமைச்சருக்கு இப்பிரச்சினையையிட்டு கடிதம் வரைந்திருக்கிறார்.

பொ. கட்சித் தலைவரின் கடிதத்திற்கு நிதி அமைச்சர் எழுதிய பதிலில் ஒரு உண்மையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அந்த உண்மை திரு. ஜீ. ஜீ.க்குப் பலத்த அடியும் கூட. "உள்ளூராட்சி அமைச்சருடன் கலந்துபேசி 1965-ம் ஆண்டு யூன் மாதம் 22-ம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானப்படி சிங்களத் தேர்ச்சி பெருத அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, பதவிஉயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது'' என்று நிதி அமைச்சர் திரு. ஜீ. ஜீ.க்கு தெரிவித்திருக்கிறார். நிதி அமைச்சர் மறைமுகமாக "இப்பிரச்சினைகளில் நீர் தலையிட வேண்டாம்அதைத் தமிழரசார் கவனித்துக்கொள்வார்கள்'' என்று கூறுவது போல் இருக்கிறது.

## ஓய்வு பெற்றோர் பிரச்சினை

இதேபோன்று ஓய்வு பெற்ற தமிழ் ஊழியர் விடயத்திலும் பொ. கட்சித் தலைவர் நடந்துகொண்டிருக்கிறார். இவ்வாரம் பிரதமருக்கு திரு. ஜீ. ஜீ. எழுதிய கடிதத்தில் ஓய்வு பெற்ற ஊழியர் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். சிங்களச் சட்டத்தினால் ஓய்வு பெற்ற தமிழ் ஊழியர் பிரச்சினை பற்றித் தேசிய அரசாங்கம் பதவியேற்ற நேரத்திலேயே தமிழரசார் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அன்று நாட்டின் நிதிநிலைமை மோசமாக இருந்த காரணத்தினால் சில பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியாது இருந்தது. என்றாலும் ஓய்வு பெற்ற ஊழியர்கள் அரசாங்க கூட்டரவுகளில் ஏதாவது பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தால் அவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுவார்கள் என்று பிரதமர் வாக்குறுதி கொடுத்திருந்தார். இந்த உண்மைகளை அறிந்திராது இன்றுதான் திரு. ஜீ. ஜீ. இப்பிரச்சினைகளில் கண்ணேட்டம் செலுத்துகிறார்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பொய்ப் பிரசாரத்தை உடன் நிறுத்துக

## எதிர்க்கட்சியினர் கூற்றுக்கு திரு. மாணிக்கம் சாட்டை

'தமிழரசுக் கட்சியினர் இந்நாட்டின் விரோதிகள் என்ற பிரச்சாரத்தை எதிர்க்கட்சியினர் உடன் நிறுத்த வேண்டும். சிறுபான்மை மக்கள் தேசிய விரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்டுவார்களானல் நான் அவர்களின் சவாலை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்'' என்று மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் 18-ம் திகதியன்று மூதவையில் பேசுகையில் கூறினர்.

அரியணை உரை மீது மேலும் திரு. மாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:

"எதிர்க்கட்சியினர் அரியணை உரை ஒரு நீண்ட பயனற்ற அறிக்கை என்று கூறினார்கள். ஆனால் அந்தப் பயனற்ற அறிக்கையின் மீது அவர்கள் எட்டுமணி நேரங்களுக்குமேல் பயனற்றமுறையில் பேசியிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

"தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததின் மூலம் முக்கிய கொள்கைகளைக் கைவிட்டு விட்டதா என்று எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள். அப்படியாயின் நான் இதே கேள்வியை கம்யூனிஸ்டுக் கட்சியினரிடமும், சமசமாசக்கட்சியினரிடமும் கேட்க விரும்புகிறேன். தமிழரசுக்கட்சியும் ஐ. தே. கட்சியும் இணைந்து செயல்பட்டதற்கு முக்கிய காரணம் இந்த நாட்டில் சனநாயகத்தைக் காப்பாற்றவேண்டுமென்பதே. நாம் எதிர்க்கட்சியினர் காட்டும் அரசியல் கொள்கையில்-சோசலிசத்தில் நம்பிக்கையுடையவர்கள் அல்ல. சனநாயக சோசலிசக் கொள்கையிலே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சிறிமாவோ அரசாங்கமும் மறைந்த திரு. பண்டாரநாயக்காவின் சனநாயக சோசலிசக் கொள்கையைப் பின்பற்றப் போவதாகக் கூறியே மக்களின் நம்பிக்கையைப் பெற்றது. ஆனல் நடைமுறையில் கம்யூனிசத்தைப் புகுத்த அவர்கள் முயற்சித்தார்கள். கம்யூனிசத்தைப் புகுத்தப் போவதாகக் கூறி உலகத்தின் எந்தப்பகுதியிலும் மக்களின் ஆதரவை யாரும் பெற்றது கிடையாது.

### ஒற்றுமை வேண்டும்

"இன்று தேவையானது மக்கள் ஒற்றுமை. இதைத் தேசிய அரசாங்கம் சாதித்திருக்கிறது. நீண்ட பல ஆண்டுகளாக சுதந்திர நாளை பகிஷ்கரித்துவந்த வட-கிழ் மாகாண மக்கள் கடந்த ஆண்டு அம்முறையிலிருந்து தம்மை மாற்றிக்கொண்டனர். இது ஒன்றே தேசிய அரசாங்கத்தின் சாதனையைக் கூறப் போதுமானது.

"தேசிய அரசாங்கம் ஐந்து ஆண்டுகள் நிலைக்குமா என்று எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள். தேசிய அரசாங்கம் நீண்டு நிலைப்பதுடன் மட்டுமல்ல இந்த நாட்டுப் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கும் என்று அவர்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

"பொலனறுவாவிலிருந்து கிழக்குமாகாணத்திற்குள் செல்லும்பொழுது வேற்று நாட்டுக்குப் போவதாக அன்று டாக்டர் பெரேரா கூறினர். அன்று நமது பிரதேசம் தேடுவாரற்ற நிலையில், எத்தகைய அபிவிருத்தியும் செய்யப்படாது இருந்தது. இன்று நமது வீதிகளைத் திருத்துவதற்கு அதிகப்படியாகச் செலவுசெய்யவேண்டியிருக்கிறது. ஒழுங்கான முறையில் அன்றைய அரசாங்கம் வட-கிழ் மாகாணங்களை நிர்வாகித்திருந்தால் இன்று அதிகப்படியான செலவு நிச்சயம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

### சமஷ்டி பிரிவினையா?

"சிறுபான்மையினரின் பிரதேசம் மொழி அடிப்படையிலோ அல்லது இன அடிப்படையிலோ விளக்கப்பட்டிருக்கிறது. இது கம்யூனிசதத்துவம். இந்திய நாட்டில் மாநிலங்கள் மொழி அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்க் கட்சியினர் தமிழரசுக்கட்சி இந்நாட்டின் விரோதி என்று பிரச்சாரம்செய்வதை உடன் நிறுத்தவேண்டும். நாம் கோருவது ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பே. இந்த அமைப்பை கம்யூனிச நாடுகளும் ஏற்றுள்ளன. சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த முறையே சிறந்தது என்பதை சோசலிச நாடுகளும் ஏற்றுக்கொண்டு பரிகாரம் கண்டுள்ளன. சிறுபான்மையினர் தேசிய விரோத செயல் ஒன்றில் ஈடுபட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் ஒரு சம்பவத்தைக் கூறுவார்களேயானல் நான் அவர்களின் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். சமஷ்டி அமைப்பு முறையே நாடு பிளவுபடுப்பதை தடுக்கக்கூடிய ஒரு சிறந்த பரிகாரமாகும்.

### திணிப்பு வேண்டாம்

"யாழ்ப்பாண மக்கள் அன்று சிங்களத்தைப் படிக்க முன்வந்தார்கள். ஆனல் திரு. பண்டாரநாயக்கா சிங்களத்தை வலிந்து புகுத்த முற்பட்டதும் அவர்கள் சிங்களம் படிப்பதை நிறுத்திவிட்டார்கள். இன்றும் சிங்களத்தை வலிந்து புகுத்தும் முயற்சி கைவிடப்பட்டால் மீண்டும் தமிழ்மக்கள் சிங்களத்தை விரும்பிப்படிக்க முற்படலாம். எதிர்க்கட்சியினர் தமிழ் மக்கள்மீது சிங்களத்தைத் திணிக்க விரும்புவதாகக் காட்டிக்கொள்வதும் ஒரு ஏமாற்றுவித்தை. எதிர்க்கட்சியினர் இப்பிரச்சினையை உயிரூட்டி நாட்டில் இன, மத, மொழிக்கலவரங்களையும் பிளவுகளையுமே ஏற்படுத்த முற்படுகிறார்கள். இப்பிரச்சினையை ஓர் அரசியல் ஆயுதமாகப் பாவித்து ஆதாயம் பெற எதிர்க்கட்சியினர் விரும்புகிறார்கள். இது நாட்டின் முன்னேற்றத்தைப் பாழ் படுத்திவிடும்.

'இந்த நாடு முன்னேற வேண்டுமென்பதில் எதிர்க்கட்சியினருக்கும் நம்பிக்கையிருந்தால் அவர்கள் அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பைக் கௌரவிக்க வேண்டும். இம்முறை ஐ. நா. சபையில் உள்ள ஏனைய நாடுகளிலும் உண்டு.

'மூதவையைக் கலைப்பதற்கும் எதிர்க் கட்சியினர் ஒரு திருத்தப் பிரேரணையை முன்மொழிந்திருக்கிறார்கள். ஆனல் ரஷ்சியாவில் கூட இரு சபைகள் உள்ள அரசியல் அமைப்பே இருக்கிறது. அப்படியானல் இங்கு ஏன் மூதவை இருக்கக்கூடாது. மூதவை கலைக்கப்பட்டாலும் நான் அதிர்ச்சியடையப் போவதில்லை. காரணம் நான் பாராளுமன்றத்திற்கு போட்டியிட்டு வெற்றிபெறுவேன், தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இருக்கும் வரை.

'தேசிய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் ஒற்றுமை பலதரப்பட்ட மக்களையும் ஒன்றுபடுத்தி இந் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என்று இங்கு நம்பிக்கையுடன் கூறிவைக்கிறேன்.

## பொ. கட்சிக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு மாற்றப்பட்டுள்ளது குறித்து வவுனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரமும் அவரது ஆதரவாளர்களும் ஆத்திரமும் வெறுப்பும் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பொ. கட்சியின் கிளைச் செயலாளர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் நாடு திரும்ப முன்பு அவசர அவசரமாக மாநாடு கூட்டப்படுவதையிட்டு ஏற்கெனவே உடுப்பிட்டியிலுள்ள, குறிப்பாகக் கரவெட்டியிலுள்ள திரு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர்கள், திரு. பொன்னம்பலத்தின் மேல் வெறுப்பும் அதிருப்தியும் அடைந்திருப்பது வாசகர்கள் அறிந்ததே.

திரு. பொன்னம்பலம் ஆகஸ்ட் மாதத்தில் தனது சொந்த விஷயமாக இங்கிலாந்து செல்ல இருக்கின்றார் என்றும் அதனல்தான் அவசர அவசரமாக யாழ்ப்பாணத்தில் மாநாட்டைக் கூட்டுகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

வவுனியாவில் மாநாடு நடத்துவதற்காக வவுனியா பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரத்திடம் ரூபா 13000 திரட்டித்தரும்படி கேட்கப்பட்டதாகவும், திரு. சிவசிதம்பரம் அதற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆயினும், திடீரென யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதாக முடிவு செய்யப்பட்டதற்குக் காரணம், வவுனியாவில் மக்கள் அதிகமாகத் திரளமாட்டார்கள் என்பதே என்றும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்த முடிவு செய்த பொன்னம்பலம் கட்சி காரியசபைக் கூட்டத்துக்கு திரு. பொன்னம்பலம் சமுகமளிக்கவில்லையென்றும் 'யாழ்ப்பாணத்திலேயே மாநாடு நடத்தப்படவேண்டும்' என்று தனது கையாட்களிடம் திரு. ஜீ. ஜீ. சர்வாதிகாரத்தொனியில் கூறியனுப்பியதாயும் அறியப்படுகிறது.

இந்தத்திடீர் மாற்றத்தால் வவுனியா பா. உ. சிவசிதம்பரமும் அவரது ஆதரவாளர்களும் மிகுந்த வேதனையும் வெறுப்பும் அடைந்திருக்கிறார்கள். திரு. பொ.வின் சர்வாதிகாரமான போக்கை எதிர்த்து, உள்ளுக்குள்ளேயே பெரிய அணியொன்றும் உருவாகி வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

## தமிழரசார்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியாக எதையும் சாதிக்க முடியவில்லை என்பதை உணர்ந்த பொ. கட்சியினரும் அவர்கள் தலைவரும் தமிழரசார் சாதனைகளிலாவது தங்களை மறைத்துக் கொள்ள முற்படுகிறார்கள். இது பேடித்தனமான செயல். இயலாமையைப் பகிரங்கமாகக் கூறலாம்! அதைவிடுத்து மாற்றார் பணியில் பெருமை காண்பது கெட்டிக்காறர், களுக்கு சிறப்பல்ல என்பதை அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

—:0:—

## திரு. ஜீ. ஜீ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட பின்பு, அதில் இந்துக் கலாச்சாரத்திற்கு தனிப்பகுதியை நிறுவி, இராமனுதன் விட்டுச் சென்ற சொத்துக்களை அதற்குக் கொடுக்கலாமே" என்றாரே பார்க்கலாம், திரு. பொ.வின் முகத்தில் ஈயாடவில்லையாம். இரண்டாம் தரமும் கேட்டுப் பார்த்தார். எவ்வித பதிலும் திரு. பொன்னம்பலத்திடமிருந்து வெளிவரவில்லை!

ஒரு சாதாரண சதாசிவம், இராணி அப்புக்காத்தான திரு. பொன்னம்பலத்தை ஒரு கேள்வி மூலம் மடக்கியது பற்றியே அன்றைய கூட்டத்தில் வந்திருந்தவர்கள் பேசிக்கொண்டனராம்.

## எது தாங்காது?

இந்தியக் கட்டிடக் கலைமரபின் படி ஜெர்மன் பொறியியலாளர்களின் மேற்பார்வையில் கட்டப்பட்டு கொழும்பில் வான் முட்ட எழுந்து நிற்கும் ஒன்பது மாடிக்கட்டிடம் செம்பினல் செய்யப்பட்ட 12எழுத்துக்களைத் தாங்காது என்று ஒரு 'பொருளாதார நிபுணர்' கண்டுபிடித்திருக்கிறார். உண்மையில் இந்த பன்னிரண்டு எழுத்துக்களும் கட்டிடத்தின் முகப்பில் பொறிக்கப்பட்டால் கட்டிடம் தாங்காதா அல்லது அந்த 'பொருளாதார நிபுணரி'ன் உள்ளந்தாங்காதா என்பதை ஒரு மனேதத்துவ நிபுணரே கண்டு பிடிக்க வேண்டும்.

இலங்கை மத்திய வங்கிக் கட்டிடத்தின் முன்புறத்தில் தமிழ்ப் பெயரைப் பொறிப்பதில்லை என்று வங்கி ஆளுனர் முடிவு செய்திருப்பதாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. முன்புறத்தில் இப் பெயரைப் பொறித்தால் கட்டிடம் தாங்காது என்று அவர் கருதுகிறாராம்.

கட்டிடத்தின் உட்புறத்தில் மறைவாக தமிழ்ப் பெயரைப் பொறிக்க ஆளுனர் விரும்பியிருப்பதால் எழுத்துக்கள் சிறிதாகவும் அவை மரத்தினல் அல்லது பிளாஸ்டிக்கினல் செய்யப்படலாம் என்றும் தெரிகிறது.

வங்கியின் பெயரைக்குறிக்கும் சிங்கள எழுத்துக்கள் செப்பினல் செய்யப்பட்டன என்பதுடன் அந்த எழுத்துக்கள் ரூபா 75000 செலவில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


**உங்கள் குறைகள் என்ன?**

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்.

மஹா மாந்திரீக கலாநிதி

**பி. எம். திசாநாயக**

(அரசாங்கப் பதிவுசெய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

கம்பளை, போன்: 454

**T. K. அமிர்தா**

**ஜீரண சக்தி லேகியம்**

மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்படவேண்டும். அது இல்லாதிருக்குமானல், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ண ரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு, முதலிய நோய்களுக்கு பலன் கொடுக்கும் சிறந்த மருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்.

குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி: இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம்செய்யும்.

**அமிர்தா**

**ஜீரண சக்தி லேகியம்**

சிறிய புட்டி ஒன்றுக்கு ரூபா 3-00
பெரிய புட்டி ஒன்றுக்கு ரூபா 5-50

தபால் செலவு வேறு.

விபரங்களுக்கு:

**செல்லராஜா அன்கோ**

பாக்கியலெட்சுமி வைத்தியசாலை

170, செட்டியார் தெரு. கொழும்பு-11.

# கன்றியதும் வெதும்பியதும்

பிரேமா கண்களில் பனித்த நீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு நின்றாள். நானறியக் கலங்கி இராத அவளது கண்கள் கலங்குவதைக் கண்டதும், கட்டுக்கடங்காமல் எனது சக்தியையும் மீறிக்கொண்டு வந்த அழுகையை சாதுர்யத்துடன் அடக்கிக்கொண்டேன்; மனதுக்குள் உருகினேன்; என் கள்ளத்தை எண்ணி நைந்தேன். மனச்சான்றின் முன்னிற்க முடியாதவனாக நொடிக்கு நொடி வேதனை எனும் வெள்ளத்தில் கலந்து அலைக்கழிப்புக்குள்ளானேன். 'பிரேமா! என்னை மன்னித்து விடு' என்று எனக்குள் கூறிக்கொண்டேன். பிரேமாவின் கன்னங்களில் கண்ணீர் அருவிகளாய் வடிந்துகொண்டிருந்தது. அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் மனவலியிழந்தவனாய் வெறிச்சோடிக் கிடந்த தெருவை நோக்கிச் சிலையானேன். அவள் கரகரத்த குரலில் கேட்டாள்.

'நீங்கள் போகத்தான் வேண்டுமா?'

பிரேமாவின் முகத்தைத் தொட்டு கண்ணீரைத் துடைத்துவிடுகிறேன். இதன் முன்பு அவள் முகத்தைத் தொட்டபோது உற்ற உணர்வு இல்லை இப்போது; அப்போது கண்ட உள்ளக் கிளுகிளுப்பு இல்லை. மகிழ்ச்சியில் மிதக்க வேண்டிய மனம் மாற்றொணா துன்பத்தின் கரையில் நின்றது. அந்தப் பட்டுப் போன்ற முகம் என் உள்ளத்தில் முள்ளாய் உறுத்த விரக்தி அடைந்து நின்றேன்.

கம்பளைக்கு நான் மாணவ ஆசிரியனாக வந்தபோது வீடு கிடைக்காமல் அவலப்பட வேண்டியதாக இருந்தது. எவரும் எனக்கு வீடு தர இசையவில்லை. பல இடங்களில் விசாரித்து அலுத்துப்போன பின்புதான் இந்தத் தென்னந்தோப்பிலுள்ள; இதோ நான் நிற்கின்றேனே இந்த ஓலைக் குடிசையில் இடம் கிடைத்தது. ஓரளவு நல்ல வசதியுடன் தங்க இந்த ஓலைக் குடிசையிலாவது இடம் கிடைத்ததே என்று திருப்திப்பட்டுக் கொண்டேன். நான் வீடு இன்றி நகரெங்கும் அலைந்தும் கிடைக்காமல் நாலைந்து நாள் அவலப்பட்டதைக் கூறியதும் இரக்கம் காட்டி இடமளிக்க உதவியவள் இந்தப் பிரேமா தான். ஆசிரியர் தானே, பண்போடு நடந்துகொள்வார்; நமக்கு எதுவும் இடைஞ்சல் இருக்காது என்று அறியாதவளாகிய எனக்குச் சிபாரிசு செய்தாள். அவளது பேச்சுக்கு அந்தக் கிழம் புஞ்சிபண்டாவும்;—அது தான் அவள் தந்தையின் பெயர்; இணங்கினார்.

அன்று அவள் எனக்கு இடமளித்தாள். குடிசைக்குள் மட்டுமல்லாது நெஞ்சுக்குள்ளேயும் இடமளித்திருப்பாள் என்று நான் அநுபவமிருந்தும் எண்ணிப் பார்க்கவில்லை.

பள்ளிக்குச் செல்ல அதிகாலையிலேயே நான் எழும்பிவிடுவேன். பக்கத்திலிருந்த கிணற்று நீரில் தான் குளிக்கச் செல்வேன். நான் குடிசைக்கு வந்ததும் ஆவி பறக்க உண்டி தயாரித்து வைத்திருப்பாள். அப்பமோ, பிட்டோ, பலகாரமோ எதை அவள் கைதொட்டு செய்து வைத்தாலும் குறைபட்டுக்கொள்வதற்கு இடமிருக்காது. உண்டவுடன் வயிற்றோடு நெஞ்சமும் திருப்தியால் நிறைந்திருக்கும். அவற்றின் சுவையால் மட்டும் நெஞ்சம் நிறையும் என்று என்னால் கூற இயலாது. நான் பள்ளிக்கு நேரத்தோடு செல்ல வேண்டும் என்பதில் அவள் காட்டும் பரிசனை—தயவு—தாட்சண்யம் இவையெல்லாம் நினைக்க நினைக்க இனிக்காமல் என்ன செய்யும், அதுவும் என்னைப் போன்ற ஒருவனுக்கு!

ஒருநாள் பள்ளி விடுமுறை. நான் வேறு எங்கும் செல்ல மனமின்றி குடிசைக்குள்ளிருந்து 'சேக்ஸ்பியரை'ப் படிக்கத் தொடங்கினேன். சேக்ஸ்பியரில் மூழ்கி இருந்த எனக்கு புஞ்சிபண்டா வெளியில் போனது தெரியவில்லை. பிரேமாவும் நானும் தனித்து இருக்கின்றோம் என்பதையும் அறியாமல் அந்த இனிய காவியத்தில் மூழ்கி இருந்தேன். பிரேமா பின்னின்று அழைத்தாள்—

'மாத்தியோவ்!'

நான் திரும்பினேன். எழிற் சிலையாக நின்றிருந்தாள் பிரேமா. இடுப்பில் சுற்றிக் கட்டி இருந்த சீலை; இறுக்கமாக உடம்பில் அணிந்திருந்த ரவிக்கை—அவள் அழகை மெருகுபடுத்திக் காட்டிக்கொண்டிருந்தன. சடுதியான ஒரு பிரமிப்பு.

'தம்லட்ட மெஹி ஒனத?'

தன் கையில் இருந்த இளநீர்க் கற்றையைக் காட்டிக் கேட்டாள்.

'ஒவ்! தெண்ட கோ!'

நான் எனது கரங்களை நீட்டினேன். அவள் அதரங்களில் இளநகை நெளிந்தோடு இன்றது. பதில் பேசாது உள்ளே சென்றவள் கணப்பொழுதில் இளநீரைச் சீவிக்கொண்டு குவளையுடன் வந்தாள். இளநீரைக் குவளையில் ஊற்றிக் கொடுத்தாள். நான் போதுமெனத் தலையசைத்தேன்.

**"வரையண்ணல்"**

'இளநீரின் சுவை எப்படி?'

அவள், சிங்களத்தில் கேட்டாள்.

பிரமாதம்.'

'குளிர்ச்சியாக இருக்கின்றதல்லவா?'

நான் தலையை மட்டும் அசைத்தேன். அவள் என் முகத்தையே பார்த்த வண்ணம் ஒரு கணம் நின்றாள். எதையோ சொல்லத் துடிக்கும் துடிப்பின் கீற்று முகத்தில் படர்ந்திருந்தன. எதைச் சொல்லப் போகின்றாள்..., என்று நான் ஏக்கத்தோடு பார்த்தேன். என் மனதில் அவள் எண்ணத்தை அறியும் துடிப்பு. நானே புரிந்து கொள்ளவும் முடிந்தது. ஆனால் அவள் சொல்லட்டும் என்று காத்திருந்தேன். ஆயின், அவள் எதையும் சொல்லவில்லை. திடீரென, இளநீரையும் குவளையையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டாள். நான் ஜன்னல் வழியாக, அவள்சென்றபின், புஞ்சி பண்டா வருவதைக் கண்டதும் திடீரென, அவள் தன் உள்ளக்கிடக்கையினையும் வெளியிடாமல் சென்றுவிட்டதின் காரணத்தை உணர்ந்துகொண்டேன்.

இது தான் எங்கள் காதல் தொடர்பின் ஆரம்பம்.

தென்னந் தோப்புக்குள் செல்லும் ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்று அருகிலிருந்த நெல் வயலையடைந்தேன். காலை வேளையாதலால் உடலில் படிந்த சூரிய ஒளி இதமாகத்தான் இருந்தது. வரம்புகளுக்குள் தேப்பமிட்டு நின்ற நீர் சூரிய ஒளியில் பளிங்காய் ஒளிர்ந்துகொண்டிருந்தது. கிழவன் அருவி நீரை இறைத்து விட்டுக்கொண்டிருந்தான். கண்ணெட்டும் தூரம் வரைப் பெருவெளியாய்ப் படர்ந்து கிடந்த வயல் பரப்புகளின் அந்தத்தில் கருங்குன்றுகள் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தன. சொந்த நாட்டை நினைவுக்குக் கொண்டுவந்தன குன்றுகள். எங்குசென்றாலும் தேயிலை மணம் என்னோடு கூடிவருவதை எண்ணி உள்ளூர மகிழ்ந்த வண்ணம், வரம்புகளில் நடந்து அருவியை நெருங்கினேன். கிழவன் என்னைக் கண்டதும் சிரிப்பை வலுக்கட்டாயமாக வரவழைத்துக்கொண்டு வரம்புக்கு வந்தான். வரம்பில் உட்கார்ந்துகொண்டவன்;

'மாஸ்டர் இப்படி உட்காருங்க. என்றான். நான் உட்கார்ந்தேன்.

'உங்களிடம் நான் ஒரு சங்கதி பேசவேண்டும்.'

' '

..........................

நான் கிழவனின் முகத்தை நோக்கினேன். முகத்தில் வரியிட்டிருந்த கோடுகள் கிழவனின் மனதில் படர்ந்திருந்த கவலையின் பிரதிபலிப்பாக விருந்தன. நான் எதிர்பாராத ஒன்றை பண்டா சொன்னான்;

'நீங்கள் பிரேமாவை மனதார நேசித்தால் மணந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால்; அதன் பின்னர் எங்கள் சமுதாயத்தில் நான் வாழ முடியாது. அதற்காக நீங்கள் எனக்கொரு பெரிய உதவியைச் செய்ய வேண்டும். என்னுடைய நலத்துக்காக... நான்... ...சுயநலமி தான்...' இதைச் செய்யுங்கள்; தட்டாமல் செய்யுங்கள்! பிரேமாவை மறந்து மாற்றத்தை எடுத்துக்கொண்டு இங்கிருந்து சென்றுவிடுங்கள்... மாஸ்டர்... மறுக்காமல் இதைக் செய்யுங்கள்...'

**எமது சிறுகதை**

கிழவன், தன் மனதில் எழுந்த துயரத்தின் ஆற்றலையெல்லாம் அடக்கிக் கொண்டு, தட்டுத் தடுமாறி இவ்வளவையும் கூறி முடித்தான். பதில்பேச இயலா வண்ணம் வாயடைத்துப் போய்நின்றேன். பிரேமா...!, என் மனத்தின் ஆழத்தினின்றும் உணர்ச்சிமிக்க—உருக்கமான ஒலி ஒன்று எழுந்து தொண்டையை அடைத்துக்கொண்டது.

பிரின்சிபல் கொடுத்த கடிதத்தில்கண்ணீர்த் துளி விழுந்து ஊறியது. கடிதத்தை மீண்டும் ஒருதடவை கண்கள் மேய்ந்தன. 'தலவாக்கொல்லை மகாவித்தியாலயத்துக்கு நீர் மாற்றப் படுகின்றீர்.' என் மனதைக் கிளறி விடுகின்றது கடிதத்தில் கண்ட இக்குறிப்பு. மறந்துபோயிருந்த தலவாக்கொல்லை—எப்பொழுதோ நான் மாணவனாக இருந்த காலத்திலே—நடந்த நிகழ்ச்சி இவை என் நினைவுக்கு வரத் தொடங்கின. என் வாழ்க்கையில் ஏற்பட்ட மிக முக்கியமான நிகழ்ச்சி அது. அத்தனையும் மறந்து பிரேமாவின் அன்புக்கு அடிபணிந்து வாழ்ந்தேன். இப்போது அந்த நினைவு கூர்ந்ததும் நான்செய்த பெரும் தவற்றை உணர்ந்து கலங்கினேன்; இரவிரவாகக் கண்ணீர் சிந்தினேன்!...எதையோ நினைத்து......

நான் மாணவனாக இருந்த போது பிரேமாவைப் போலவே என்னைக் கவர்ந்து என் அன்புக்குக் கட்டுப்பட்டு என்னோடு நெருங்கிப் பழகினாள் தனலட்சுமி. அவளுக்கிருந்த கலையுள்ளம்—ஈடு இணையற்ற அழகு—அந்த அழகில் நான் கண்ட தெய்வீகத் தன்மை இவைதான் அவளிடம் என்னை ஈடுபடுத்தின. நான் கல்லூரியிலே ஈடுஇணையற்ற அழகனாகவிளங்காவிட்டாலும் கல்லூரியிலேயே சிறந்த நடிகனாக—பாடகனாக பேச்சாளனாக விளங்கினேன். அதுதான் என்மீது அவளுக்கு ஈடுபாடு ஏற்படக் காரணமாக அமைந்தது. அவள் என்னோடுஇணைந்தேவிட்டாள்!...

நான் ஜி. ஸி. ஈ. பரீட்சை எழுதும் தறுவாயில் இருந்தேன். அவள் எட்டாம்வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று பள்ளிக்கு வராமல் நின்றுவிட்டாள். ஒருநாள், இரண்டுநாள்...... ...இப்படியே ஓடி மாதம் இரண்டு கழிந்தோடின. அவை இரண்டு யுகமாகவே எனக்குக் கழிந்தன, வழி மேல் விழிவைத்து அவளுக்காக நான் கல்லூரியில் ஏங்காத நாட்கள் இல்லை. நிலையிழந்து நான் என்னையே மறந்து தவித்துக்கொண்டிருந்தேன்.

மலைநாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள் எல்லோரும் தொடர்ந்து கல்வி பயில்வது அபூர்வம். கல்வி கற்கும் ஆசையும், ஆர்வமும், ஆற்றலும் இருந்தும் காலக் கொடுமையால் மிகைப்படும் வறுமையைத் தாங்காதுமலையேறி கொழுந்தாய்வது இங்கு இயல்பாகிவிட்டது.

தனத்தைப்பற்றி நான் கண்ட கனவு......? அது ஒரு நொடிக்குள் சிதைந்து கனவாகவே போய்விடுமென்று நான் எண்ணியிருக்கவில்லை. தற்செயலாக ஒருநாள் அவளது தோட்டத்துக்குச் சென்று கூடையிட்டுக் கொழுந்தாய்வதைக் கண்டேன் புத்தகங்களைமட்டுமே தூக்கிச் சுமந்த கரங்கள்——பேனை தொட்டு ஏட்டில் எழுத்துக்களைமட்டுமேவடித்துப் பழகிய கரங்கள் தேயிலையில் கொழுந்தாய்ந்துகொண்டிருந்தன. எனது கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. 'தனம்...!' கூப்பிடவாயெடுத்தேன். துக்கம்தொண்டையை அடைத்துக்கொண்டது. என்னைக் காணுவதற்கே துடிக்கும் கண்கள் தேயிலைச் செடியையே நோக்குவதினின்றும் பெயராமையைக் கண்டேன். நெஞ்சம் வெடித்துப் பொருமலாய் வெளிவர, கண்ணீரோடு அகன்றுவந்தேன்.

நாட்கள் நகர ஒருவாறு மறந்து படிப்பில் ஆழ்ந்தேன். பரீட்சை முடிந்தது முதல் தரமாகச் சித்தி எய்தினேன். வறுமைக்கு இலக்கான எனது குடும்பத்தில் நெருக்கடி மிகுந்தது தொழில் தேடி அலைந்தேன். மாணவ ஆசிரியனாக வேலை கிடைத்ததும் மட்டற்ற மகிழ்ச்சியோடு கம்பளைக்கு வந்தேன்.

"பிரேமா! நான் போகாமல் இருக்க முடியாது பிரேமா. மாற்றலாகித்தான் போகின்றேன். எப்படியும் மீண்டும் வந்து காண்கிறேன்.' என்று கூறினேன். என்னை எனக்குச் சரிப் படுத்திக் கொள்ள இயலவில்லை. பிரேமா கண்ணீரோடு நின்றாள்

'நீங்கள் போக வேண்டாம்; போகவே வேண்டாம் நானும் உங்களோடு வருவதென்றால் அநுமதிக்கின்றேன் இல்லையென்றால் ...... பதட்டத்தில் கூறினாள் பிரேமா, பின் எதையோ எண்ணித் தாழ்ந்தவளாக;

'நீங்கள் போவதென்றால் என்னையும் கூட்டிச் செல்லுங்கள்! உங்களோடேயே தான் நான் இருக்க வேண்டும்.'

'இல்லை பிரேமா ...! நான் தனியாகத்தான் வேண்டும்......' அவள் கன்னங்களில் பாய்ந்த நீரைத் துடைத்து விட்டேன் மீண்டும் நான் உன்னை மறக்கவே மட்டேன் பிரேமா; மறக்கவே மாட்டேன்! என்ன, என் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை?... நான் வரட்டுமா?...''

அவள் கண்களில் இருந்து முத்துக்களாய் உதிர்கின்றது நீர். நான் குடிசையிலிருந்து நடக்கின்றேன். அவள் கேவிக் கேவி அழும் ஓசை காதில் விழுகின்றது.

இருண்டு கிடந்தது தோட்டம்; ஏன் உலகமே இருண்டு தான் கிடந்தது. நாய்கள் லயத் தண்டை சென்ற என்னை வரவேற்றன .வீட்டின் அண்மையில் சென்றேன். லயமே உறங்கிடந்தது. எங்கள் வீட்டு 'இஸ்தோப்'பில் ஏதோ முனகல் ஒலி கேட்டது. கதவைத் தட்டி அம்மா என்று கூப்பிட்டேன். அம்மா கதவைத் திறந்தாள். என்னப்பா இந்த நேரத்தில்?' என்று கேட்பது போல் ஆச்சர்யக் குறி படர்ந்தது அவள் முகத்தில். 'லீவம்மா.' என்று சொல்லிக் கொண்டே கதவை உள்ளே தள்ளிக்கொண்டு சென்றேன், கதவிடுக்கில் யாரோ சுருண்டு படுத்திருந்தார்கள். கதவைத் திறக்க முடியாத வண்ணம்.

'யார் இது,; என்றேன்.

'யாரோ பிச்சைக்காரி. லயத்துக் காட்டுல அரிசி வாங்கிக் கொண்டு வந்திருக்கு. இருட்டிப் போனதும் போறதுக்கு சங்கடப் படவும் இங்கே இரவைக்கு மட்டும் இருக்கட்டும் என்று நிப்பாட்டி வச்சேன்.,

'எந்தத் தோட்டமாம்?'

பிச்சைக்காரிக்குத் தோட்டமேது? இருந்திச்சாம்' நான் திடுக்கிட்டு அமைதியானேன். அம்மா தொடர்ந்தாள்;

'நல்லா படிச்ச பொண்ணு; காலக் கொடுமையால இப்பிடிப் பொயிருச்சி, அதுக்கு என்ன வயசாச்சா ஒண்ணு? இப்பத் தான் இருவது வயசு, யாரோ சென்பகப்பூற் தோட்டத்துல இருந்த பயலோட தெரியாம ஓடிப் பொயிரிச்சாம். வேலையில்லாதவன் என்ன செய்வான்? கொஞ்ச நாள் கண்டியில் மூட்டைத் தூக்கி பெண்ணைக் காப்பாத்தப் பாத்திருக்கான். முடியாம திருக்கனு மலையில் போயி ருந்திருக்காங்க. அந்தப் படுபாவிப் பய அங்க இருந்து இத மட்டும் உட்டுப் புட்டு

(15-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட சபைகள் மூலம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

'நான் என்மீது நம்பிக்கை கொண்டவன், எனது படைப்புகளை இட்டு எழுப்பப்படும் பிரச்சினைக்கு என்னால் பதில் அளிக்க முடியும் என்ற மனோநிடத்திஞல் தான் பல கொள்கைகளையுடையவர்களையும் ஒரே மேடையில் அழைத்து, நீங்கள் எனது நூலை நன்றாக விமர்சனம் செய்யுங்கள், அவற்றுக்கெல்லாம் நானும் தகுந்த விளக்கங்கள் தருகிறேன். பொது மக்களாகிய வாசகர்கள் யார் சொல்வது சரி என்று புரிந்து வருங் காலத்திலாவது ஆக்க இலக்கியங்களுக்கு ஆதரவு நல்கட்டும் என்றநல்லெண்ணத்திஞல் இந்த விழாவை ஏற்பாடு செய்தேன்.

முதலாவதாக நான் எனது இறுகதைத் தொகுதிக்கு 'வீ' என்ற பெயரை ஏன் கிட்டேன், அதன் கருத்து என்னவென்று பலரும் கேட்டார்கள். அதற்கு விளக்கம் தருதல் எனது பணி. நான் முறபோக்கு எழுத்தாளர்களுடன் சேர்ந்து வாழ்ந்தவன்-எனது கதைகள்தான் தமது சிறந்த முற்போக்கு கதைகள் என்று தம்பட்ட மடித்தவர்கள் 1961ம் ஆண்டில் சகிராக் கல்லூரியில் நடைபெற்ற முறபோக்கு எழுத்தாளர் மாநாட்டில் பிரச்சினைக்குரியவஞக என்னை ஆக்கிஞர்கள். அன்று அந்த அணியை விட்டு விழுந்த மலர்தான் இந்த 'வீ' என்னும்சிலர் கருத்துக்கூறுகிருர்கள். நான் அன்றே அவர்களது அணியில் இருந்து விலகிக் கொண்டேன். வாடி விழுந்த மலரையும் 'வீ' என்று கூறுவார்கள். மலரின் ஆரம்பநிலையையும் 'வீ' என்றே சொல்லலாம். எனது 'வீ' எது என்பதை நீங்கள் படித்து தெரிந்து கொண்டால் அதுவே போதுமானது. நான் சில எழுத்துக்களை சரளமாக பாவித்ததையிட்டு திரு நடராசா அவர்கள் குறை கூறிஞர்கள். அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை; சாதி என்று எழுதுவதிலும் பார்க்க 'ஜாதி' என்று எழுதும் போது மிகவும் கம்பிரமாக தொனிக்கிறது. இந்த தொனிப்பில் ஒரு விழிப்பை காண்பவன் நான். ஆதலிஞல் அவற்றை தேவையான இடங்களில் பாவித்துக் கொண்டே வருவேன்.

## ஏன் இந்த அவதி

"நண்பன் சிவத்தம்பியை நான் அழைக்கும் பொழுது இவர் வந்து இப்படியான விஞக்களை எழுப்பி முற்போக்கு எழுத்தாளர் அணிக்கு முட்டுக் கொடுக்க முயற்சி எடுப்பார் என்று எதிர்பார்த்தே அவரை அழைத்தேன். அவர் நான் எதிர்பார்த்தபடியே பேசியது எனக்கு அளப்பரிய ஆனந்தத்தை தருகின்றது. முற்போக்கு எழுத்தாளர்களுக்கு முதுகு கொடுத்து முண்டு கொடுப்பவரே, தான் ஆற்றல் இலக்கியம் படைப்பவன் அல்லன் என்று தனது வாயாலேயே தனது அறியாமையை விளக்கி விட்டார்.

[இச் சந்தர்ப்பத்தில் திரு. சிவத்தம்பி குறுக்கிட்டு 'எங்கள் அணியில் சிறந்த ஆற்றல் இலக்கியம் படைப்பவர்கள் இருக்கிருர்கள்' என்று கூறிஞர்.]

'இதற்கு மேல் நான் எதையும் கூற விரும்பவில்லை.

நானே எனது முன்னுரையில் 'எனது கதைகளுக்கு ஓவியம் வரையும்படி ஓவியர்களிடம் கொடுத்திருக்கிறேன். அவர்கள் சிறந்த முறையில் தங்கள் கைவண்ணத்தை காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்' என்று கூறியிருக்கிறேன். இதை படித்த பின்புமா நண்பன் சிவத்தம்பி அவர்கள் ஓவியங்கள் நன்ருக அமையவில்லை என்று என்மீது பிழை கண்டு கொள்ள முற்படுகிருர்.

'அவர் எவ்வளவு தூரம் ஆத்திரமும் அவதியும் படுகிருர் என்பதற்கு ஓர் சிறு உதாரணத்தை காட்ட முற்படுகிறேன். நான் ஸ்பூட்னிக் சலூனில் கதை நடை பெறுவதாக எழுத அவர் 'டொமினிக் சலூனில்' நடைபெறுவதாக கற்பனை பண்ணுகிருர். அதே கதையில் அங்கு இருக்கும் தொழிலாளி கடைகளில் இருக்கும் படங்களின் பெயர்களை சொல்ல எவ்வளவு தடுமாறுகிருர் என்ற உத்தியை நான் கையாண்டிருப்பதை நண்பன் சிவத்தம்பி விளங்கத் தவறி விட்டார்.

## பலூன் விளையாட்டு

"எனது நூல் நற்போக்கு இலக்கியக் கோட்பாட்டின் பிறப்பு என்று திரு. சிவத்தம்பி கூறிஞர். நான் அப்படி எங்குமே கூறவில்லை, நற்போக்கு இலக்கியக் கோட்பாட்டினை இந்த இலக்கிய விமர்சகர் புரிந்து கொள்ளாமையினுலேயே அப்படிக் கூறிஞர். இக்கோட்பாட்டை நான் முன்வைத்து முழுதாக மூன்ருண்டுகள் கூட ஆகவில்லை. ஆனல் எத்தனையோ ஆண்டுகளாக முற்போக்கு இலக்கியம் பற்றி பேசிவரும் முற்போக்கு அணியினர் தம் கோட்பாட்டின் பிறப்பாக - பிரதிபலிப்பாக - இரண்டு நூல்களைக் கூறமுடியுமா?

திரு. கா. சிவத்தம்பி: 'ஆம் நூல்கள் இருக்கின்றன. ஆனல் அவை 'தீ' யுமல்ல 'வீ' யுமல்ல."

திரு. பொன்னுத்துரை: 'ஐயா! ரஜபாட் நடிகன் மேடையில் நடிக்கும் பொழுது பலூன் வாழைப் பழத் தோலில் மிதித்து மேடையில் சறுக்கி விழுந்து விட்டு, தான் ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டதாக நினைத்துக் கொள்வது போன்று; நீர் எதற்காக 'தீ' என்ற தோலிலும் 'வீ' என்ற தோலிலும் மிதுத்து விழுகிறீர். மேலும் ஐந்துநிமிடங்கள் தருகிறேன். முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டின் பிரதிபலிப்பாக இரண்டு நூல்களை உம்மால் கூறமுடியுமா?'

திரு. கா. சிவத்தம்பி: (மௌனம்.)


## காப்பி அடிப்பதுதான் முற்போக்கு இலக்கியமா

திரு. பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது!

"ஐயா! ஏன் பலூன் விளையாட்டு விளையாடுகிறீர்கள். உள்ளதை வெளிப்படையாக சொல்லுங்கள். ஏன் மூடி மறைக்கிறீர்கள்?

'உங்களதுஎழுத்தாளர்கள் ரஷ்சியன் படத்தை 'கொப்பி' பண்ணிஅட்டைப் படத்துடன் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டால் அது முற்போக்கு இலக்கியமாகுமா?'

'எனது சிறந்த கதைகள் சில இத்தொகுப்பில் இடம் பெறவில்லை என்று கூறினீர்கள். ஆம், நீங்கள் சிறந்த முற்போக்கு கதைகள் என்று அன்று பாராட்டிய கதைகளை நான் இன்று திருப்பிப் படிக்கும் பொழுது, பிரதேச மொழிகளில் எழுபத்தைந்து வீதமான பிழைகள் தென்பட்டன. ஆதலிஞல் அவற்றை இத்தொகுதியில் நான் சேர்க்க விரும்பவில்லை. எனது கதைகளுக்கிடையில் பெரும் இடைவெளி இருப்பதாக கூறுனீர்கள். அதற்கு காரணம் உண்டு. அன்று நான் கதைகள் எழுதும் பொழுது படித்து பாராட்டுபவர்கள் எனக்குமுகஸ்த்துதி பாடுபவர்களாக இருந்ததிஞல் எனது வளர்ச்சி மற்றவர்களுக்கு தெரியவில்லை. நான் தனி மனிதஞக என் மேல் நம்பிக்கை கொண்டு எனது படைப்புகளை படைக்க முற்பட்ட பொழுது பலரது கருத்துக்களும் எனது பரிணும வளர்ச்சிக்கு துணையாக இருந்தன. இதை விட்டு நான் முற்போக்கு குழுவை விட்டு பிரிந்து நிற்பதால் பெரும் இடைவெளி இருப்பதாக நண்பன் சிவத்தம்பி அவர்கள் கஞக்காண்கிருர். இனிமேல் ஆகுதல் வாசகர்களைஏமாற்ருமல் உங்கள் ஆற்றலை எழுத்து வடிவத்தில் காட்டுங்கள். மக்கள் நல்லவற்றுக்கு மதிப்பு தருவார்கள்."

# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.

விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.




டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWT R.C9

# 'வெண்ணிற ஆடை'

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

ஸினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் திரைப்படம் ஒன்றை இலவசமாகப் பார்ப்பதற்கு இப் போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப் போட்டியில் கலந்துகொள்வதற்கு எது விதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும், ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப் போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

### விதிகள்:

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்'களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக் கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனே சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

### பரிசுகள்

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்வீதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 5-8-66**

15-8-66 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.

விடைக்கான கூப்பன் 13-ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில்
'வெண்ணிற ஆடை' இலவசப் போட்டி.
என்று எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

# புரட்சியை தாங்கும் உள்ளம் நமது மக்களுக்கு இல்லை

## படத்தணிக்கை பற்றி சந்திரபாபு கருத்து

"நானது தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற படத்திற்கு ஏன் அந்தப் பெயரை வைத்தேன் என்பதை விளக்கும் காட்சி படத்திலிருந்து வெட்டப்பட்டு விட்டது. நமது மக்கள் எப்பொழுதுமே புரட்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத நோஞ்சானுகவே இருக்கிறார்கள் என்பதற்கு அந்தக் காட்சி வெளிவராமல் தடுக்கப்பட்டது ஒரு நல்ல உதாரணமாகும்." இவ்வாறு நகைச் சுவை நடிகர் சந்திரபாபு அளித்த பேட்டி யொன்றில் கூறியுள்ளார்.

திரு. சந்திரபாபு சொந்தத்தில் தயாரித்து தற்பொழுது தமிழகத்தில் திரையிடப்பட்டுள்ள 'தட்டுங்கள் திறக்கப்படும், என்ற படத்தைப் பற்றி வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். திரு. சந்திரபாபு மேலும் கூறியுள்ளதாவது:-

'ஒரு குழந்தை டாக்டரால் முழு முயற்சி செய்து கைவிடப்பட்ட பிறகு பிழைக்க முடியாத அந்தச் சிசுவைத் தூக்கிக் கொண்டு நான் ஒடி வருகிறேன். வழியிலே காற்றும் மழையும் பலமாக அடிக்க நான் திசை திருப்பப் பட்டபோது மாதா கோயிலுக்குப் போக முடியவில்லை. ஒரு முருகன் கோவிலைக் காண்கிறேன். அந்தக் கோயில் கதவுகளைத் தட்டினேன். கதவுகள் திறக்கப்பட்டன. முருகன் சிலையை கிறிஸ்தவனான நான் காண்கிறேன். அப்போது எனது கண்ணுக்கு முருகன் உருவமும் பின்னர் யேசு உருவமும் இப்படி மாறி மாறி காட்சி தருகிறது. முருகனுடைய வேல் எனக்கு சிலுவையாகவே தெரிகிறது. குழந்தையும் உயிர் பிழைத்து விட்டது. இந்தக் கருத்தைத் தான் நான் வைத்த பெயருக்குக் காட்சியாக அமைத்தேன். அதை நீங்கள் படத்தில் காண முடியாது. கத்தரிக்கோல் திருவிளையாடலுக்கு அது பலியாகி விட்டது.

'இந்தக் காட்சி மட்டும் வெளியே வந்திருந்தால் கிறிஸ்தவர்கள் கூட என் மீது வாதப் போர் தொடுத்து கண்டனக் கணைகளை எய்திருப்பார்கள். அது பற்றி நான் கவலைப்படவில்லை.

'இந் நாட்டில் படங்கள் வெற்றியடையாததற்கு காரணம் மக்கள் தான். மக்களுக்கு போதுமான கல்வியறிவும், மனவளமும் ஏற்பட்டு விட்டால், அவர்களுக்கு எதையும் உணரும் தகுதி வந்து விடும்.

இன்றைய சினிமா தொழிலில் போட்டி-பொருமை மிகுந்து விட்டது. அதனால் நல்ல கருத்துக்களை சொல்ல வாய்ப்பளிக்கப்படவில்லை.

'சந்திரபாபு நன்றாகப் பாடுகிறான், நடிக்கிறான், ஆடுகிறான் டைரக்ட் செய்கிறான் கதை எழுதுகிறான். இவ்வளவு சக்தி ஒரு தமிழனிடம் இருப்பதைக் கண்டு தமிழர்களே பொருமைப் படுகிறார்கள் இந்தப் பொருமைக் குணம் நம்மிடமிருந்து தொலைய வேண்டும்.

'நம் நாட்டைப் பொறுத்தவரை 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் படம் பார்க்க வேண்டும் என்று சட்டம் இயற்றுவது அவசியம். அதுவரை சிறுவர் சிறுமியர் சினிமாவைப் பார்க்கக் கூடாது. அதை விட்டு விட்டு மாணவப் பருவத்திலேயே சினிமாவைப் பார்த்து விட்டு அதிலே கே. ஆர். விஜயா தித்திப்பது எது? என்ற பாடலைப் பாடும் போது அதைக் கேட்டுப் பார்த்து அதையே தாம் பள்ளிப் பருவத்திலே செய்ய முயன்றால் நாடு கெடத் தானே செய்யும்?

அரசினர் அளிக்கும் பட்டங்கள் பற்றி பாபு கூறியதாவது:

'தமிழ் மொழி தெரியாத இரண்டு ஆர்பான் சிங்குகளும் சுரண் சிங்குகளும், சுனில் யாக்களும் பார்த்து தங்க மெடல் தருவதை நான் வெறுக்கிறேன். கலையுணர்வு படைத்தவர்கள் தரும் பராட்டே போதும். மொழி தெரியாதவர்களது பாராட்டை ஒரு பாராட்டாகநான் கருதவில்லை'

# காங்கிரஸ் நிர்வாகத்திற்கு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திய ரீதியில் இயங்குகின்ற போதிலும்; அக்கட்சியில் ஏற்பட்டிருக்கும் பிளவு ஆட்சியைக் கைப்பற்றும் ஒரு சிறு சந்தர்ப்பத்தைத் தானும் அக்கட்சிக்கு இல்லாமற் செய்து விட்டது.

அத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சி ஏதோ மக்கள் கட்சி மக்கள் கட்சி என்று தம் பட்டம் அடித்த போதிலும், அது மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஓர் இயக்கமாக இன்று வரை இந்தியாவில் இயங்க முடியவில்லை. அத்துடன் கம்யூனிஸ்டுகள் என்றால் அவர்களும் ஒருவகையில் வெளிநாட்டு ஏகாதிபத்திய விருப்பம் கொண்டவர்கள் என்ற எண்ணமே பொது மக்கள் மனதில் எழுந்து நிற்கின்றது. சீன ஆக்கிரமிப்பு இந்தச் சந்தேகத்தை இந்தியப் பொது மக்கள் மத்தியில் மேலும் பலப்படுத்திவிட்டது.

### சுதந்திராக்கட்சி

சுதந்திராக் கட்சி அகில இந்திய ரீதியில் செயல்படும் கட்சியாக தன்னைப் பிரச்சாரப்படுத்திக் கொண்ட போதிலும், அதுவும் மக்கள் கட்சியாக வளர முடியவில்லை. சுதந்திராக் கட்சியின் முதலாளித்துவக் கொள்கைகீழ்மட்ட, நடுத்தர மக்களின் ஆதரவைப் பெறக்கூடியதாக இல்லை. அத்துடன் சுதந்திரக்கட்சியின் பாதுகாவலரான ராஜாஜி அவர்கள் உலகப் பிரச்சினைகளையிட்டு அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துக்கள் அக்கட்சியின்வளர்ச்சிக்கு பெரிதும் பாதகமாக அமைகின்றன. வியட்நாம் பிரச்சினையையிட்டு அண்மையில் ராஜாஜி அவர்கள் தெரிவித்த கருத்தை பலரும் பலமாக கண்டித்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுக்கள் எங்ஙனம் கம்யூனிச ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளாகவிளங்குகிறார்களோ அதே போன்றுசுதந்திராக் கட்சி அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் உள்நாட்டு ஏஜண்டுகள் என்று இந்தியப் பொது மக்கள் கருதுகிறார்கள்.

*[அடுத்த வாரம்: தமிழ் நாட்டில் கட்சிகள் நிலை]*



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் இந்திப் படமான பொக்சர் (BOXER) படத்தில் ஒரு காட்சி

# முரசொலி மாறன் டைரக்டர் ஆகிறார்

படத்தயாரிப்பாளரும் வசனகர்த்தாவும் கலைஞர் மு. கருணாநிதியின் மருமகனுமான முரசொலி மாறன் எம். ஏ. இப்பொழுது டைரக்ஷன் துறையிலும் இறங்கியுள்ளார்.

கலா பிக்சர்ஸ் தயாரிக்கும் 'மறக்க முடியுமா'? என்ற படத்தை மாறனே டைரக்ட் செய்து வருகிறார்.

இப்படத்தில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் கவர்ச்சிப்பாவை தேவிகா, முத்துராமன், காஞ்சனா, சகஸ்ரநாமம் ஆகியோர் நடிக்கின்றனர்.

# கஷ்டமான நடிப்பு எது?

## ரவிச்சந்திரன் விளக்குகிறார்

'எந்த நடிப்பென்றாலும் நடித்துத் தள்ளி விடுவேன். ஆனால் ஒரேயொரு நடிப்பு மட்டும் மிகவும் கஷ்டமானது' என்கிறார் நடிகர் ரவிச்சந்திரன். குமரிப்பெண் படப்பிடிப்பின் போது தான் சந்தித்த அனுபவம் ஒன்றை அவர் இங்கு கூறுகிறார்.



'அந்த முரட்டு மனிதரை நான் முதல் தடவையாகப் பார்த்தேன். டிபிகட்டினி என்றால் என்ன என்பதே அறியாதவர்போல மொழு மொழு என்று வளர்ந்திருந்தார் அவர்.

படப்பிடிப்பு அறையிலே ஒரு கட்டிலின் மீது உட்கார்ந்திருந்த அவரை டைரக்டர் டி. ஆர். ராமண்ணா சுட்டிக் காட்டி 'இவரோடு நீங்கள் சண்டை போட வேண்டும்' என்று சிறிது சிரித்துக் கொண்டே சொன்னார்.

அப்படியா? என்று சம்பிரதாயத்துக்காகக் கேட்டுக் கொண்டேனே தவிர, உள்ளூரக் கொஞ்சம் திகிலாகவே இருந்தது. ஏனெனில் அவரது தோற்றம் அப்படி அமைந்திருந்தது.

'அவரது பெயர் ராஜாராம் என்று சொன்னார்கள். பலமாமல்லர்களுடன் மற்போர் புரிந்திருக்கிறார் என்று அவருடைய வீரப்பிரதாபங்களை வருணித்தார்கள். அவர் என்னோடு சினிமாச் சண்டை போடவே வந்திருக்கிறார். என்றாலும் எனக்கு அச்சம் ஏற்படவே செய்தது.

'சினிமா உலகுக்கு நான் புதியவன். இதுவரையில் கடுமையாக மோதிக் கட்டிப் புரண்டு சண்டை போட்டதேயில்லை. அதனால்தான் அந்த மாமிசக்குன்றை கண்டதும் யோசனையாக இருந்தது.

'என்னை 'குமரிப் பெண்' டைரக்டர் ராமண்ணா, மல்லர் ராஜாராமுக்கு அறிமுகம் செய்வித்த பொழுது என் கைகளைப்பற்றி அவர் குலுக்கியதே சில நிமிடங்களுக்கு வலித்தது. அப்படிப்பட்டவருடன் மோதிச் சண்டையிடுவதாவது! சிறு தயக்கத்துடன் அறையிலே நடை போட்டேன்.

'ஆனாலும் படம் தயாரித்தவர் என்னை விடவில்லை. மாமிச மலையோடு நான் மோத வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டார்.

என் திகைப்புக்கும், தடுமாற்றங்களுக்கும் அதிக நேரம் கொடுக்காமல், டைரக்டர் என்னை உற்சாகப்படுத்திக் கோதாவில் கொண்டு வந்து நிறுத்தச் சொன்னார். கிலியுடன்போய் நின்றேன்.

'மிஸ்டர் ராஜாராமன் உடம்பில் குத்தி உங்களுடைய கையில் வலி ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். அது வீண் வேலை. ஏனெனில் அது ஏற்கெனவே ஏகப்பட்ட குத்துக்களை ஏற்றுக் காய்த்துப் போய் விட்டது' எனக்கு மேற் கண்டபடி சொல்லப்பட்டு இறுதியாக என்ன செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. மிஸ்டர் ராஜாராமை தலைக்குமேலே தூக்கிச் சுழற்றி கீழே போட வேண்டும். அவ்வளவுதான் மிகவும் பாடுபட்டு அவரைத் தலைக்குமேலே ஓரளவு தூக்கினேன். அது என்னால் எப்படி முடிந்தது என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அந்தக் காட்சியை வெற்றிகரமாகப் படமாக்கினார்கள். உடனே என்னைச் சூழ்ந்து கொண்டு 'பலே,ரவி' என்று பாராட்டினார்கள்.

''ஆனால் அவர்கள் என் கையைப் பிடித்து உலுக்கிப் பாராட்டுவதற்காக அதைப் பற்ற வந்தார்கள். கைகளில் ஒன்று அதற்குத் தயாராக இல்லை. காரணம் அது வலுவிழந்து போயிருந்தது. ஏதோ பெரிய சாதனையைச் செய்துவிட்ட பெருமிதம் எனக்கு ஏற்பட்டுள்ளது. படங்களில் ஆடி ஓடி உருண்டு புரண்டு காதல் காட்சிகளில் நடிப்பது சுலபம், ஆனால் இப்படிப்பட்ட பயங்கர மனிதர்களைத் தூக்கித்தட்டா மாலை சுற்றித் தரையில் போடுவது மிகவும் கஷ்டம்.''



தங்களை மறந்த மயக்க நிலையில் இருக்கும் இக்காதலர்களை சிலோன் எண்டர்டெயின்மெண்ட் ஸாரின் அடுத்த திரைவிருந்தான ''சித்தியில்'' காணலாம்.-முத்துராமன், விஜயநிர்மலா.

## உதய சூரியன் நாடகமன்றம்

கடந்த 2-7-66 அன்று மாலை நான்கு மணியளவில் வெள்ளவத்தை உதய சூரியன் நாடகமன்றத்தின் சார்பாக கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் என். முத்தையா தலைமைதாங்கினார். இம்மாத இறுதிக்குள் 'தமிழ் வாழ தலை கொடுத்தான்' நாடக ஆரம்ப விழா நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் தோழர். கனகராஜா, செல்வி. நிர்மலா தேவி, சுந்தரி, மதியழகி, புரட்சியழகன் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

## தழுவல் தயாரிப்பாளர் மீது ஹாலிவூட் வழக்கு

ஆங்கிலப் படங்களின் கதையைத் தழுவி இந்தியாவிலுள்ள இந்தி, தமிழ்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களைத் தயாரிப்பது என்பது இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. இதனால் அந்த ஆங்கிலப்படங்கள் இந்தியாவில் திரையிடும்போது அதற்கு வசூல் குறைகின்றது என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து, தங்கள் ஆங்கில படக்கதையைத் தழுவிபடத்தயாரிப்பாளர்கள் மீது ஹாலிவுட் நிறுவனங்கள் வழக்குத் தொடர ஆரம்பித்துள்ளன என்று தெரிகிறது.

டார்ஜான் என்ற கதையைத் தழுவி இந்தியில் படமாக்கியுள்ள இந்திப்படத் தயாரிப்பாளர்கள் இருவருக்கு எதிராக ஹாலிவூட் தயாரிப்பாளர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதே போன்று தற்போது தயாரிப்பிலிருக்கும் இன்னொரு இந்திப்படத் தயாரிப்பாளருக்கு எதிராகவும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலும், ஆங்கிலப்படங்களைத்தழுவி படங்கள் தயாரித்த, தயாரித்து வரும் படத்தயாரிப்பாளருக்கு எதிராக வழக்குகள் தொடர குறித்த ஹாலிவுட் நிறுவனங்கள் ஏற்பாடு செய்து வருவதாக தெரிகிறது.



பத்மினியின் பண்பட்ட உருக்கமான நடிப்பு நிறைந்த ''சித்தி''யில் ஒரு காட்சி.

## ''வெண்ணிற ஆடை''

### இலவச குறுக்கெழுத்துப் போட்டி

### விடைக் 'கூப்பன்'

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஜெ | ய | 2 ல | லி | 3 தா | ■ | 4 இ | 5 |
| 6 | | ம | ■ | | ■ | 7 | ல |
| | ■ | | ■ | 8 த் | 9 ந் | | |
| ■ | 10 வி | | ■ | ■ | | ■ | ■ |
| 11 | ரோ | ■ | 12 ம | | யா | | 13 |
| ■ | | ■ | 14 | உ | | ■ | |
| 15 | ■ | 16 | ள் | ■ | ■ | 17 வி | |
| 18 பா | | ■ | 19 நா | | | | ம் |

முழுப் பெயர்......................................................

முகவரி......................................................

......................................................

......................................................

......................................................

நீங்கள் படம் பார்க்க வசதியாக உள்ள தியேட்டரின் பெயர்

......................................................

ஊர்

......................................................

கையொப்பம்

### இடமிருந்து வலம்

1. வெண்ணிற ஆடையின் கதாநாயகி இவர்.
4. இரட்டையர்களின் இது வெண்ணிற ஆடைக்கு சிறப்பைத் தருகிறது.
6. கூற்றுவன் உருமாறிக் கிடக்கிறான்.
7. வலமிருந்து வாசித்தால் இது ஒரு பிரபல பின்னணிப் பாடகியின் பெயர்.
8. வெண்ணிற ஆடை கதாநாயகனின் பெயர் தலைகீழாகக் கிடக்கிறது.
10. விநியோகம் தடைப்படுகிறது.
11. பிரபல தமிழ்க் கதாநாயகியொருவரின் முதல் இரண்டு எழுத்துக்களும் இவை.
12. வெண்ணிற ஆடை கதாநாயகியை ஆரம்பத்தில் பிடித்தாட்டும் இது இங்கே மாறுபட்டுக் காணப்படுகிறது.
14. ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய இது இப்படியாகி விட்டதே!
16. இது தீண்டினால் வேதனைதான்.
17. குரங்கு குத்துக்கரணம் போடுகிறது.
18. இன்றைய தமிழ்ப்படங்களில் இந்த உணர்ச்சி அதிகமாக இருப்பதாக பலரும் குறைப்படுகிறார்கள்.
19. இந்த வாத்தியத்தின் ஒலி வெண்ணிற ஆடை கதாநாயகிக்கு கிலியை ஊட்டுகிறது.

### மேலிருந்து கீழ்

1. வெற்றி;
2. வெண்ணிற ஆடையில் சிறீதர் அறிமுகம் செய்து வைத்த புதுமுக நடிகை பூரணத்துவமற்ற நிலையில் தலைகீழாகக் காணப்படுகிறார்.
3. பேரன் தடுமாறுகிறார்.
5. வெண்ணிற ஆடை துணை நடிகையின் இயற் பெயர் இதுதான்.
9. ஜயலலிதாவின் தாயார் உருமாறி விட்டாரே!
10. பகைவன்.
12. அடுத்த நாள் அலங்கோலப்பட்டு விட்டது.
13. ஸ்ரீதரின் கதைகளில் இந்த உணர்ச்சி அதிகமாக இருக்கும்.
15. வெண்ணிற ஆடையில் ஜெயலலிதா இந்தப் பெயரில் வருகிறார்.
17. கீழிருந்து வாசித்தால் சூரியன் வெளிப்படுவான்.

# குறு நாவல்களே காலத்திற்கேற்றன

## விரைந்து செல்லும் மக்கள் பெரு நாவல்களை வெறுக்கின்றனர்

மிகச் சிறந்த தொடர்கதை ஒன்றினைப் படித்து, அனுபவித்து இன்புற்ற நிறைவும் பூரிப்பும் பிரபல எழுத்தாளர் எஸ். பொ. வின் சடங்கை வாசித்து முடித்தபோது ஏற்பட்டது. அறிவியல் யுகத்தில் 'ஆ! ஊ!' என்று அடித்து விழுந்து ஓடிக்கொண்டிருக்கும் உலகத்தின் போக்கை நன்கு புரிந்து கொண்டு - மனிதனுக்கு ஓய்வு நேரம் மிகக் குறுகிக் கொண்டே வருகிறதென்ற உண்மையை விளங்கிக் கொண்டு அளவாகச் சடங்கை முடித்துள்ள எஸ். பொ. அவர்கள், இன்றைய நாவல் எந்த அளவில் இருக்க வேண்டுமென்பதற்கு இலக்கணமும் வகுத்திருக்கிறார். இதற்குமேல் நீளுகின்ற நாவல்கள், பத்திரிகையிற் சிறிது சிறிதாக வெளியிடும் உத்தியால் இன்றைய மனிதனை இழுத்துப் பிடித்தாலும் நிச்சயமாக நாளைய மனிதனை இழுத்துப் பிடிக்க மாட்டா. இந்த உண்மை. கல்கியின் பெரு நாவல்களை இன்று எத்தனை பேர் படிக்கின்றார்கள் என்று ஆராய்ந்தால் இன்னும் நன்றாக விளங்கும்.

இக்காலத்து மனிதன் எதிலும் முடிவை விரைவில் அறிய விழைகின்றான். நீட்டி நிமிர்த்தி, இழுத்து நெளித்து சுற்றி வளைப்பதை அவன் அடியோடு வெறுக்கின்றான். இதனை உணர்ந்த 'சடங்கு' ஆசிரியர் கதையை இறுக்கமாகவும் விறுவிறுப்பாகவும் முடித்திருக்கின்றார். விரிப்புகளும் உரையாடல்களும் சுருக்கமாக உள்ளன; சுவையாக இருக்கின்றன. சலிப்புத் தட்டுகின்றது என்று நெஞ்சம் நினைப்பதற்கு முன் நிகழ்ச்சி வேறுகின்றது. தொடக்கத்தில் வரும் செந்தில்நாதனின் கடனெடுப்புப் படலம், பின்னர் வீட்டுக்குப் போகவேண்டும் என்கிற முடிவு, இறயிற் பயணம், பாத்திரங்களின் இயல்புகள் பற்றிய அறிமுக விவரிப்பு, மட்டக்களப்புக் குடும்பம், பிரயாணிகளின் உரையாடல் என்று இவற்றை எடுத்துக் கொண்டாலென்ன, அல்லது பத்திரிகையில் ஒரே கிழமையில் வந்த பகுதியில் (மூன்றாம் பகுதி - திங்கள்: முதல் வந்த பகுதி) வரும் பிள்ளைகளின் விளையாட்டு, வேலியடைப்பு, பங்கு இறைச்சி அலுவல், 'காணி விஷயம்' அதில் ஏற்படும் திருப்பம் என்று இவற்றை எடுத்துக் கொண்டாலென்ன, எவ்விடத்திலும் பலதும் பத்துமான நிகழ்ச்சிகள் செம்முசெம்மென்று செம்மப்பட்டிருப்பதைக் காணலாம்!

### திரிநோக்கு [3]

### யாழ்ப்பாண நடை

'என்னெனை மலைச்சுப் போய் நிக்கிறீர்?'

'மெய்யப்பா இண்டைக்கு இரெயில் பிந்தியே வந்தது?'

★

'நீங்கள் இண்டைக்கு வருவியளெண்டுதான் நினைச்சன்.'

'சும்மா புலுடா விடாதையும்.'

★

'என்னெனை அவன் உன்ரை சீலையப் புடிச்சுக் கொண்டு தொங்குறான்?'

'நீங்கள் ஆடியிலை ஒருக்கா அமாவாசையிலை ஒருக்கா வருவியள், அவனுக்குப் புறத்தி மனுசரின்ரை முகம் போலை கிடக்காக்கும்.'

★

'மெய்யப்பா அண்ணனுக்குத் தேத்தண்ணி கலக்கட்டே?'

'நான் அதெல்லே வாங்கியந்து வைச்சிருக்கிறன்.'

★

'நீங்கள் இன்னுஞ் சாப்பிடேல்லைத்தானே?'

> திரிநோக்கின் முதலாம், இரண்டாம் நோக்கினை முறையே திரு. வ. சு. இராசரத்தினம், திரு. செம்பியன்செல்வன் ஆகியோர் எழுதினர். இந்த இறுதி நோக்கினை எழுதும் வி. கந்தவனம் அவர்கள் நாடறிந்த கவிஞராவர். புவியியற் பாடநூற் சபையிலும் நற்பணியாற்றியுள்ளார். அவருடைய இரண்டு கவிதை நூல்கள் இது வரையில் வெளிவந்துள்ளன.

'இல்லை, ஏன்? என்ன விஷயம்?'

'ஒண்டுமில்லை இருங்கோவன் ... கொஞ்சம் எடுங்கோவன்.'

- இவை உரையாடற் சிறப்புக்கான உதாரணங்கள்.

பொன்னுத்துரை அவர்கள் வசனநடைக்குப் பெயர் பெற்றவர் சடங்கில் வரிக்கு வரி தன் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார்.

**வி. கந்தவனம்**

'சபாபதிக்கு முசுப்பாத்தி ஏற்றிக்கொண்டிருக்கும் பொழுது, அவனுடன் கொம்பனியாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் செந்தில்நாதனும் கொஞ்சம் பாவித்தார். கனகாலத்துக்குப் பிறகு சோக்காத்தான் இருக்குது.'

'தற்கால ஊழியனாக நாலு வருடம் மட்டையடித்த பின்னர் நிரந்தர சேவையிற் சேர்ந்து 'அப்பாடா' என்று மூச்சுவிட்டார்.'

இவை போன்றே ஒவ்வொரு வசனத்தாலும் யாழ்ப்பாணத்தைச் சுருட்டிக் கட்டியிருக்கிறார். இவற்றில் வரும முசுப்பாத்தி, சோக்கு, மட்டையடித்தல் என்பன போன்றே பிற இடங்களில் வரும் நரகற் அளவு. தவண்டையடித்தல், ஒரு வகைச் சுதி, அசுக்கிடாமல், உசும்பிற சிலமன், புறியங் காட்டுதல், சளப்பல்காரன், அடைஞ்சு கிடத்தல், பசைப்பிடிப்புப் போன்ற பேச்சு வழக்கில் உள்ள அருஞ் சொற்கள் கருத்து வளங் காட்டுகின்றன.

சில பக்க நிகழ்ச்சிகள் விவரிப்பின்றி விறுவிறுப்பான உரையாடல்களால் உணர்த்திச் செல்லுதல் ஒரு புதிய உத்தி. பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் புறப்படும் திருப்படலக் காட்சி, பலகாரக் கடைப்படலம், புத்தகங்கள் தேடும் படலம் எனப் பலவற்றைத்தான் குறிப்பிடுகின்றேன். பிள்ளைகள் என்றால் ஒரே கூத்தும் கும்மாளமுந்தானே! இதனை வசனங்களே சித்தரிக்கின்றன.

### 2

பாத்திரங்களைப் பற்றி ஒன்றுஞ் சொல்வதற்கில்லை, ஏனென்றால், 'அவைதாம் நாங்கள்; நாங்கள் தாம் அவைகள்' என்னும் அளவுக்கு, 'பூவேலையும் பூச்சுவேலையு'மின்றிச் சித்தரிக்கப்பட்டுள்ள அப்பாத்திரங்களில் யாழ்ப்பாணத்தின் நடுத்தர வகுப்பினரை அப்படியே காண்கிறோம். சடங்கு ஐந்தே நாட்களுக்குள் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்ட தொடர்கதைதான். என்றாலும், ஆசிரியரின் முன்னீட்டுக் கருத்துப்போல இந்நிகழ்ச்சிகள் நடுத்தரவகுப்பினரைத் தரிசிக்க உதவும் யன்னல்களாக அமைகின்றன. சில கதவுகளாகவே அமைந்திருக்கவுங் காண்கின்றோம். களம் எங்கேயோ ஒரு மூலைதான் - பருத்தித்துறை. ஆனால் பாத்திரங்கள் முழு யாழ்ப்பாண நடுத்தர வகுப்புக்கும் 'பிரதிநிதிகளாக' அமைகின்றன. கடன் - அதைக் கருத்தோடு தீர்த்து நிற்குந் திறன், பொறுப்பு - அதைப் பொறுமையோடு தாங்கிச் செல்லுஞ் சிறப்பு, ஊக்கம் - அதையே ஏணியாகக் கொண்டு உயரவேண்டுமென்னும் நோக்கம் உணர்ச்சி - அந்த வெள்ளத்தை வாய்க்காற் படுத்தி அடையும் உயர்ச்சி முதலிய யாவற்றையுமே 'சடங்கு' குறைவின்றிப் படம் பிடிக்கின்றது.

'படம் பிடிக்கின்றது, என்பதும் பிழைதான். ஏனென்றால், படத்தைப்போல் நடுத்தர வகுப்பில் ஒரு பக்கத்தை மட்டும் சடங்கு நமக்குக் காட்டவில்லை. எஸ். பொ. அவர்கள் நமக்குக் காட்டுகின்ற நடுத்தர வகுப்பின் இயல்பு என்கின்ற சேலையில் சிறப்பிழை நீட்டுப் பக்கமாகவும், குறைபாட்டிழை குறுக்குப் பக்கமாகவும் ஓடுகின்றன. எங்களுடைய ஆட்கள் இறயிலிற் காட்டுகின்ற, பண்பு,, பேசுகின்ற விழற்பேச்சு, முசுப்பாத்தியில் அளவுக்கு மிஞ்சி உசாரேத்துதல், வெட்டுக் கொத்திற் செழிப்படைதல், இலக்கிய இரசனையில் உள்ள வறட்சி, பார்க்கின்ற விடுப்பு, பண்ணுகின்ற விண்ணானம் எல்லாமே கதையோடு கதையாகவுள்ளன.

### பாத்திரங்கள்

செந்தில்நாதன் எதற்கும் ஏற்ற ஒரு மனிதர். (an ideal man) தொழிலா, குடும்ப வேலையா, முசுப்பாத்திக்கு நாலு பேரோடு சேர்ந்து தண்ணிபோடவா, தண்ணியே போடாமல் இருக்கவா, இலஞ்சனமா, பிழைவிடவா, பிழைவிட்டபின் சமாதானஞ் சொல்லித் தன்னைத்தானே தேற்றிக் கொள்ளவா - எதற்கும் ஏற்றவர் அவர். எதை எதை எப்பொழுது எப்படிச் செய்ய வேண்டுமோ' அதை அதை அந்தந்த நேரத்தில் அப்படிச் செய்பவர் அவர். யாழ்ப்பாணத்தவர் அதற்குத்தானே பெயர் பெற்றவர்கள்!

பாலுணர்ச்சி விவரிப்புகள் அழகாகவும் அளவாகவுமுள்ளன. இரண்டு இலட்சியக் காதலர்களின் ஈடேறாக் கலவியின் முத்தப் பாலமாக ஜெயகாந்தன் திகழ்வது போன்ற கட்டங்கள் சுவையாகவும் இயல்பாகவுமுள்ளன. பாலுணர்ச்சியை இழையோட விட்டுச் செந்தில்நாதனுக்காக வாசகர்களிடத்திற் பரிதாபத்தை ஏற்படுத்திக் கடைசியில் 'வென்றிலன் என்றபோதும்; 'என்ற அடிகளால் அந்தப் பரிதாபத்தைப் பரிகாச நிலைக்குத் தாழ்த்திவிட்ட ஒரு குற்றத்தை ஆசிரியர் செந்தில்நாதனைப் பொறுத்தவரையிற் செய்திருக்கின்றார் என்றே கூறவேண்டும். குறைபாடுகளுஞ் சேர்ந்துதான் மனிதன் முழு மனிதன் ஆகின்றான் என்பது உண்மைதான். என்றாலும்

செல்லப்பாக்கிய ஆச்சி அருமையான ஒரு படைப்பு. இந்தச் சடங்கில் அவள் உண்மையிலேயே பெரிய சீதனமாக அமைகின்றாள். மற்றைய பாத்திரங்களை ஒதுக்கித் தள்ளி வீட்டில் அவள் தனியாட்சி புரிகின்றாள். வேண்டியதுதான். உண்மையான வாழ்க்கையிலும் இந்த ஆச்சிமார் அப்படித்தானே. கதையைப் படித்து முடிந்ததும் கருத்திலே அவள்தான் ஒன்றி நிற்கின்றாள். தனியான ஓர் ஆராய்ச்சியை வேண்டி நிற்கும் உயர்ந்த பீடு நிறைந்த பாத்திரம் செல்லப்பாக்கிய ஆச்சி.

### (3)


திரிநோக்கு என்னும் இந்தப் புதுமை விமர்சனப் பகுதியிலே, என் மீது இறுதி நோக்கினை எழுதும் பொறுப்புச் சுமத்தப் பட்டுள்ளமையினால்' 'செம்பியன் செல்வன்' தம்முடைய நோக்கிலே சுட்டிக் காட்டிய ஒன்றினுக்கும் விளக்கந் தருதல் பொருத்தமுடைத்து. 'யாழ்ப்பாணத்தவரின் இலக்கிய இரசனையைக் கிண்டல் செய்யும் ஆசிரியர் தன்னையும் உள்ளிழுத்து விடுகின்றார்............ எஸ். பொ. ஒரு சமூகப் பிரச்சினையல்ல. அவர் தனி மனிதர்... 'என்று செம்பியன் செல்வன் தமது விமர்சனத்தின் இறுதிப் பகுதியில் குறிப்பிடுகின்றார். அவர் குறைபாடு என்று சுட்டிக் காட்டிய அதே பகுதிதான் எஸ். பொ. வின் நெஞ்சுரத்தையும், பரந்து பட்ட பார்வையையும் நிலைநாட்ட உதவுவதாக எனக்குப் படுகின்றது. தனி மனிதர்களைக் கொண்டது தான் சமூகம்; செந்தில்நாதன் - செல்லப்பாக்கிய ஆச்சி - அன்னலட்சுமி ஆகிய தனிமனிதர்களுடைய வரலாறுதான்; யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாறாக உயர்ந்து நிற்கின்றது! தன்னைத் தானே கிண்டல் செய்து நகைச் சுவை காணவல்ல பெற்றியனான எஸ். பொ. வினாலேதான், தானே சமூகத்தின் அங்கமாகவும், அதே சமயம் அதிலிருந்து ஒதுங்கி வாழும் 'துறவற' நிலையிலும் சடங்கை எழுத முடிந்தது. சுருக்கமாகச் சொன்னால் சடங்கு பலமடங்கு பெருமை வாய்ந்த அருமையான நாவல். யாழ்ப்பாணத்தவருக்குச் சிறந்ததொரு சீதனம். எழுத்தாளர்களுக்கு இஃது ஒரு பாட நூல்!

மலச் சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு
**ரிஷிலேகியம்**

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், குதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சீழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் டலனடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

**15 நாள் மருந்து ரூ. 3-50**
**30 நாள் மருந்து ரூ. 6-50**




ரிஷி நேத்திர சஞ்சீவியின் புதிய விலை:
**6 அவுன்ஸ் பாட்டல் 3-50**
**12 „ „ 6-50**

# உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

வைத்தியகலாநிதி என். கந்தையா

## ஓட்டக்காரரே! பால் அருந்தவும்

செல்வி. க, சிவமணி,
உடுபுசலாவ.

கே: நான் மணம் செய்யாத 23வயது நிரம்பியவள். எவ்வளவு சத்தான உணவுகள் உண்டாலும் உடல் மெலிவுற்றே இருக்கின்றது. பூச்சி மருந்தும் உண்டேன். பலனில்லை உழுந்து, எள்ளு நல்லெண்ணை, பழங்கள் சாப்பிட்டால் ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று முறை மலம் போகின்றது. இதற்கு தக்க ஆலோசனை கூறவும்.

ப: சிரண உறுப்புகள் தகுந்த அளவில் வலுவின்மையாலும், சத்துக்களை - உறிஞ்சி எடுக்கும் துந்துகிகள் சரிவர வேலை செய்யாமையாலும் இப்படியான தன்மை ஏற்பட்டுள்ளது.

எனவே மிக இலகுவில் சிரணிக்கும் உணவு வகைகள் உண்டுவருதல் வேண்டும்.

அத்துடன் உயிருட்டிச் சத்துக்கள் எடுத்துவரல் வேண்டும். எதற்கும் ஒரு வைத்தியரின் நேரடி சிகிச்சை நல்லது.

சி. முருகேசு,
காங்கேசன்துறை.

கே: நான் 16 வயதுடைய பள்ளி மாணவன், நான் பாடசாலை ஒரு மைல் ஓட்டப் போட்டியில் பங்கு பற்ற இருக்கின்றேன். ஓடும் போது இளைப்பும், களைப்பும் வருகின்றது. இதற்கு தக்கதோர் ஆலோசனை தாருங்கள்.

ப: ஓட்டக்காரரே! தினசரி பால் அருந்தி வரவும். ஓடும் போது தோடம்பழம், எலுமிச்சம்பழம் சுவைத்தல் நல்லது. அத்துடன் போஷாக்குள்ள ஆகாரம் அருந்திவரவும்.

வி. செல்வராஜ்,
பண்டத்தரிப்பு.

கே: எனக்கு வயது 19. மணமாகவில்லை. எனது விதைகளில் ஒன்று சிறிது பருத்திருக்கிறது. அத்துடன் அங்குள்ள கேசங்கள் உதிர்கின்றன. குறியும் சிறுத்து வருகின்றது. எனக்கோ பயமாக இருக்கிறது. இதற்கு நல்ல ஆலோசனை கூறுங்கள்.

ப: நான் கூறுவதிலும் பார்க்க பக்கத்திலுள்ள வைத்தியசாலைக்கு சென்று நேரடிப் பரிசோதனை செய்து சிகிச்சை பெறுவது நல்லது.

செல்வி. சந்திரா மயில்வாகனம்
உடுவில்.

கே: இருபது வயதுடைய எனக்கு கடந்த 5 வருடங்களாக விலக்குவந்ததும் முதல் நாள் வயிற்றுக் குத்தும், வயிற்றுப் போக்கும், வாந்தியும் தாங்க முடியாமல் இருக்கின்றது. முதல் 3 நாளும் பசியும் இல்லை. சாப்பிட மனமும் இல்லை., முதல் நாள் கோப்பியும் குடிப்பதில்லை. குடித்தால் வாந்தி வரும். 2ம் 3ம் நாள் காலை மாலையில் கோப்பியும், மத்தியானம் சிறிது சோறு கறி உண்கிறேன். நான்காம் நாள் வழக்கம் போல் சாப்பிட முடிகின்றது. எனது நிறை 85 இறு. வயிற்றுக் குத்து இருக்கும் போது ஏன் பெண்ணாய் பிறந்தேன் என வேதனையடைகின்றேன். இதிலிருந்து விடுபட வழியுண்டா? டாக்டர்.

ப: தினசரி தேகாப்பியாசம் செய்து வரவும். அத்துடன் வீட்டு வேலைகளையும் மகிழ்ச்சியுடன் செய்தல் வேண்டும்.

மாத விலக்கு வரும் காலங்களில் குறிஞ்சா, நறுந்தாளி இலைகளை சேர்த்த பிட்டு, களி சாப்பிடுதல் நன்று. வேப்பம் பட்டை கசாயத்தை காலை மாலை 4 அவுன் பிரமாணம் அருந்தி வரவும்.

இருந்தும் ஸ்திரீவைத்திய நிபுணரின் ஆலோசனையும், சிகிச்சையும் வேண்டற்பாலது.

எஸ். அப்துல் கரீம்,
சாந்தி நகர்,

கே: எனது வயது 17. எனக்கு மலங்கழிவதில்லை, நேரத்துக்கு நேரம் மலம் போகாததினால் கஷ்டமாக இருக்கின்றது. யாது செய்தல் வேண்டும்?

ப: தினசரி காலையில் மலங்கழிக்கப் பழகிக்கொள்ளல் வேண்டும். தேநீர் கோப்பிக்குப் பதில் அதிகாலையில் சுடுநீர் குடிப்பது நல்லது.

போதிய அளவு உணவுவகையில் கீரை வகைகள் மரக்கறி வகைகள் சேர்த்தல் அவசியம்,

தினசரி தேகப்பியாசமும் நல்ல பலன் தரும்.

க. சோதீஸ்வரன்,
காரைநகர்.

கே: எனது வயது பதினைந்து. நான் எந்நாளும் படிப்பதற்குச் சென்று புத்தகத்தைத் திறந்ததும் தூக்கம் வருகின்றது என்னால் இரவு நேரங்களில் படிக்க முடியாதிருக்கின்றது.

ப: படிக்குமறை நல்ல காற்றோட்டமுள்ளதாக இருத்தல் அவசியம். இரவில் வயிறுமுட்டச் சாப்பிடுதல் கூடாது. மனத்தை ஒருவழிப்படுத்தல் அவசியம்.

பி. மார்க்கண்டன்,
கிரான்.

கே: நான் மணமாகாதவன். கடந்த நான்கு வருடமாக எனது காற்பெரு விரல் இரண்டிலுமுள்ள நகங்கள் விழுந்து விட்டன. ஆனால் இது வரை முளைக்கவில்லை. பல வைத்தியம் செய்தும் குணமில்லை. இதற்கேதும் பரிகாரமுண்டா?

ப: உயிருட்டிச் சத்துக்கள், சுண்ணச் சத்துகள் அருந்துதல் அவசியம். உணவுவகை நல்ல போஷாக்குள்ளவைகளாக இருத்தல் வேண்டும்.

வி. எஸ். ஆனந்தன்,
கொழும்பு - 4

கே: எனது வயது 18. படித்துக்கொண்டிருக்கிறேன். சிறிது நேரம் எழுதிய பின் தூரத்தைப் பார்க்கும் போது பொருட்கள் இரு வடிவங்களாகத் தெரிகின்றது, கண்ணாடி போட வேண்டி ஏற்படுமா?

ப: கண்களின் பார்வையில் ஒன்றுக் கொன்று முரண் பாட்டினால் இப்படியான தன்மைகள் ஏற்படலாம். எனவே ஒரு கண் டாக்டரிடம் பரிசோதித்து, கண்ணாடி போட்டுக் கொள்வதே சிறந்தது.

செல்வி க. நிர்மலா,
திருநெல்வேலி.

கே: எனக்கு வயது 15; நான் பெரிய பிள்ளையாகி 6 மாதங்கள் கடந்த இரு மாதங்களாக மாத விடாய் வருவதில்லை. இதனால் மிகவும் கவலையடைகின்றேன். வழி கூறவும்.

> **உங்கள் நோய்?**
>
> 'சுதந்திரன்'
>
> த. பெ. எண். 1183,
>
> கொழும்பு-12.

ப: நீங்கள் அதிகமாக கவலையடைய வேண்டியதில்லை. சிலருக்கு இப்படியான இக்கட்டு ஏற்படுவதுண்டு. கர்ப்பாசய வளர்ச்சிக்கு தேவையான சுரப்பிகள் குறைவதனாலேயே இவை ஏற்படுகின்றன. இச்சத்து நிரம்பவுள்ள 'பாசன் வுறுட்' என்ற பழத்தை கரைத்துக் குடிப்பது நல்ல பலனை அளிக்கும்.

சு. பொன்னுத்துரை,
கொழும்பு - 14

கே: நான் தினமும் சுமார் 10 மைல் சைகிள் ஓடுகின்றேன். இரவில் படுக்கையில் நெஞ்சு நோகின்றது. வயது 20. மணமாகவில்லை. தகுந்த பரிகாரம் கூறவும்.

ப: செய்யும் வேலைக்கு தக்க ஓய்வு பிரதானம். அத்துடன் தகுந்த போஷாக்குள்ள உணவு வகைகள் சாப்பிட வேண்டும். முட்டை, பால், இறைச்சி, வகைகள் சாப்பிடவும். அத்துடன் ஒரு வைத்தியரையும் கலந்து கொள்ளவும்.

வி. சிங்கராஜ்
தெரணியகலை.

கே: ?

ப: சுதந்திரனில் நான் எழுதிய தாது நட்டமும் பரிகாரமும் என்ற கட்டுரையை தேடி எடுத்து வழிகாணவும்-

செல்வி. வி. காந்திமதி,
கொழும்பு - 10

கே: அன்பான வைத்திய கலாநிதியே! எனக்கு தலைமயிர் அடர்த்தியாகவும் - நீளமாகவும் இல்லை. இதற்கேதாவது வழி கூறுவீர்களா?

ப: உயிருட்டிச் சத்துகள் பிரதானம். அத்துடன் சுத்தமும் - நல்லஉணவும் பிரதானம். தலையில் சொடுகு உண்டாவதற்கு இடமளித்தல் கூடாது.

'லலிதா'
வண்ணார்பண்ணை.

கே: எனது வயது 19; எனது இரு ஸ்தனங்களில் ஒன்று பெரிதாக இருக்கின்றது. அமர்த்தும் போது கல்லுமாதிரி இருக்கின்றது. இப்போ சில நாட்களாக இடைக்கிடை ஊசியால் குத்துவது போல் இருக்கின்றது. இதனால் நான் கவலையால் நாளொரு விதமாக மெலிவடைகின்றேன். தகுந்த வழி கூறுவீர்களா?

ப: இப்படியான இக்கட்டான நிலைகளை பெற்றோருக்கு சொல்லித்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம் நாட்டுப் பெண்கள் மெல்லவும் முடியாமல் தின்னவும் முடியாத மாதிரி இவற்றை மறைத்து வைத்துவிட்டு கூடியபின்தான் சொல்லுவர். இதனால் நோய்கள் முற்றஏதுவாகின்றன,

நீங்கள் கவலையடையத் தேவையில்லை. உங்கள் பெற்றோரின் உதவியுடன் ஒரு ஸ்திரீ வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறுவதே சிறப்புடையது.

## நீராடப் பொய்கை நெருங்கு!

—மு. சடாட்சரன்—

செந்தமிழே! உன்னுருவில் சித்தம் பறிகொடுக்க
வந்தாய் எழில்சொரியும் வான்மதிபோல் — சொல்லுதற்கு
கொல்லும் விழியிரண்டால் கொட்டிவிட்ட நஞ்சுவிதை
கொல்லன் உலையிற் கொழுந்து!

கண்ணுள்ளே நின்றென் கருத்தைக் குலைக்கின்ற
வெண்ணிலவே! பொங்குமழல் வேதனையைத்—தண்ணுக்கும்
எண்ணத்தோ டிங்கெழுந் தேற்றமுறக் காத்திடுவாய்
உன்னிதழுக் கேங்கும் உயிர்!

செவ்விதழால் என்னைச் சிறைப்படுத்தி வாட்டுவதால்
எவ்வாறுன் நெஞ்சில் இதம்பெருகும்?— நவ்வியுடல்
வீணாகிப் போனால் விடமருந்த வேண்டிவரும்,
தேனமுதம் உண்போம் திரும்பு!

நீண்டபெரு வாழ்க்கைத்தேர் நித்தம் பொலிந்துருள
வேண்டுமடி நீயூட்டும் வீரரசம்—மீன்விழியில்
கட்டுண்டு சுற்றியழும் கம்பத்தின் கன்றானேன்
பட்டழிதல் நன்றோ பகர்?

சிமேந்து மண்ணோடு சேர்ந்ததுபோல் அன்றிருந்து
நாமொன்றாய் நட்ட நறுங்கொழுந்து—தாம்பிடுங்க
யாரால் முடியுமடி யௌவனத்தின் சித்திரமே?
நீராடப் பொய்கை நெருங்கு!

## மொழி பெயர்ப்பாளர் நியமனம்

துறைமுக (சரக்குக்) கூட்டுத்தாபனத்தில் வெளியாகும், பிரசுரங்கள், அறிவித்தல்கள் விண்ணப்பங்கள், மற்றும் பல வெளியீடுகள் தமிழிலும் வெளி வர வேண்டுமென அரசாங்க கூட்டுதாபன ஊழியர் சங்கம் பல வருடங்களாக போராடி வந்தது. இக் கோரிக்கைகளைத் தாமதமின்றி செயல் படுத்துவதற்கு தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமிக்குமாறும் முகாமையாளரை வற்புறுத்தி வந்தது. நீண்ட நாட்களாக இச் சங்கம் மேற் கொண்ட இடைவிடா முயற்சியின் பயனாக தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் கூட்டுத் தாபனத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

—

## கன்றியதும்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடிப் போயிட்டானும். நாலு மாசம் இப்புடி அவளோட கஸ்டப்பட்டு தனியா தெகச்சிப் போயி நின்னு இருக்கு அப்புறம் அங்கன நாலு நல்ல மனுசருங்க காசு குடுத்து அனுப்பிச்சிருக்காங்க. தோட்டம் வந்தா, இங்கே நாலரைமாசம் வேலை இல்லாத ஆளுக்கு வேலை குடுக்கிறதில்லைன்னுட்டான். பேரு தனலெச்சிமி! தனந்தான்......"

அம்மா இவ்வளவையும் சொல்லி முடித்தாள் என்னையறியாமலே,

'தனம்......'

என்று கூச்சலிட்டேன். அம்மா திகைத்துப் போய் நின்றாள். பேய் பிடித்தவன் போல் இஸ்தோப்புக் கோடி வந்தேன், கதவு திறந்து கிடந்தது. அவள், படுத்திருந்த இடம் காலியாய்க் கிடந்தது. இஸ்தோப்புக்கு வெளியே சென்றேன். பிச்சைக்காரி எங்கோ சென்று மறைந்து விட்டாள் இருளில். எனது கையில் கிடைத்த இரண்டு கனிகளும் ஒன்று கன்றியும் மற்றொன்று வெம்பியும் கைக்கெட்டாது போய் விட்டன. எனது மனமும் கன்றிப் போயிருந்தது. மனச்சான்று தந்த அடியால்.

## அல்லைப்பிட்டியில் வள்ளுவர் விழா

'மனித குலத்துக் கெல்லாம் வழி காட்டும் ஒளி விளக்கு வள்ளுவர் எமக்களித்த திருக்குறள். தமிழரின் தொன்மையான வாழ்க்கையின் பெருமையை, பண்பாட்டின் சிறப்பை, அறத்தின் மேம்பாட்டை உலகுக்கு எடுத்துக்காட்டும் சிரிய சின்னமாக விளங்குவது திருக்குறள். அத்தகைய குறள்கள் ஒவ்வொன்றும் மக்களின் இதயங்களில் இடம் பெற வேண்டியது அவசியம்.' இவ்வாறு அல்லைப்பிட்டி வாசிகசாலை சனசமூக நிலையத்தினர் எடுத்த வள்ளுவர் விழாவுக்கு தலைமை வகித்துப் பேசும் போது திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். மேலும் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் செல்வி சௌபாக்கியம் முருகேசு, திரு. க. சி. குலரத்தினம் ஆசிரியர், திரு. ச. சிவப்பிரகாசம் ஆசிரியர், திரு. இ. நாகராசன், 'தில்லைச்சிவன்' ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

கடைசியாக, அமரர் பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' என்னும் நாடகமும் இடம் பெற்றது. ஆசிரியரின் இலட்சியத் தீபம் நாடகமாக உருப் பெற்று மக்களின் பாராட்டுக்குரியதாகியது.

—

## புதிய அலுவலர்கள்

1966 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி நடைபெற்ற புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 1966 - 67 ஆம் ஆண்டுக்கான சங்க அலுவலர் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. வே. குமாரத்தினம், துணைத் தலைவர்கள் திரு. பொன். வாதவூரன், பிரம்மஸ்ரீ. சிவா. சோமசர்மா, கௌரவ பொதுச் செயலாளர் திரு. வை. சி. வடிவேல், துணைச் செயலாளர் திரு. வே. செல்வவிநாயகம், கௌரவ பொருளாளர் திரு. சு. தியாகராசா, துணைப் பொருளாளர் திரு. க. பரமேஸ்வரம், கௌரவ கணக்காய்வாளர் திரு. கா. ஞானதிக்கம். எட்டுப் பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.



# 4-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

- ★ தியாக உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் சிறந்த திரை ஓவியம் ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை.
- ★ ஒரு பெண் பைத்தியமாக இருந்த போது எதற்கோ சிரித்தாள்...எதற்கோ...அழுதாள்...ஆனால் மனநிலை தெளிந்த பிறகு எதற்கோ துடித்தாள்...
- ★ கல்யாணப் பரிசின் வசந்தி நெஞ்சில் ஓர் ஆலயத்தின் சீதா, இன்று வெண்ணிற ஆடையின் சோபாவாக மலர்ந்திருக்கிறார்.
- ★ ஸ்ரீதரின் கற்பனைத் தோட்டத்தில் பூத்த மற்றொரு புனித மலர்தான் வெண்ணிற ஆடை!

கவர்ச்சி நடிகை ஜெயலலிதா, ஸ்ரீகாந்த், மூர்த்தி பி. ஏ., நிர்மலா, சுந்தரராஜன், ருக்மணி, ஆஷா நடிப்பது.

சித்திராலயா அளிக்கும்

# வெண்ணிற ஆடை

(ஈஸ்ட்மென் கலர்)

இசை விஸ்வநாதன் இராமமூர்த்தி பாடல்கள் கண்ணதாசன்

கதை' வசனம், டைரக்ஷன் ஸ்ரீதர்

---

# ஜூலை 29 முதல் மகத்தான ஆரம்பம்!

செல்லமகால் (கொழும்பு) எம்பயர் (கொழும்பு) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை) வின்சர் (யாழ்ப்பாணம்)



குளிரூட்டப்பட்ட றீகல் திரையில்

(கிழமை நாட்களில் 10 மணிக்கு மட்டும்)

சிவாஜிகணேசன், சாவித்திரி, முத்துராமன், தேவிகா, நாகேஷ், கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம், ஓ. ஏ. கே. தேவர், டி. எஸ். பாலையா, மனோரமா, ஜி. சகுந்தலா

# திருவிளையாடல்

(ஈஸ்டமன் கலர்)

கெயிட்டி-4வது வாரம் எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி நடித்த **பூமாலை**


---

# ஜூலை 28 வியாழன் முதல்

## சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் ஸ்தாபனத்தார்

## பெருமையுடன் அளிக்கும் மகத்தான திரைவிருந்து

எம். ஆர். ராதா,
முத்துராமன்,
நாகேஷ்,
பத்மினி,
விஜயநிர்மலா
மற்றும் பலர் நடித்த



சித்ரா புரொக்டஷன்சாரின்

# சித்தி

திரைக்கதை, வசனம்:
கோபாலகிருஷ்ணன்

கடைசி வாரம்! சென்ட்ரல் (மருதானை) லவீனியா (நுகேகொட) பால முருகன் பிலிம்ஸ் **தாழம் பூ**

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் ஜூலை மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.